Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

19 OCT 2004

# நமது ஈழநாடு

## தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

**மொறாயஸ் மூக்குக் கண்ணாடி அகம்**

இல : 546, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P : 021 222 7893



- பல் கட்டுவதற்கும்
- பற்களுக்கு கிளிப்போடுவதற்கும்
- இலவச கண்பரிசோதனை செய்து, நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.

(1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)



மலர்: 02 திருவள்ளுவர் ஆண்டு : 2035 புரட்டாதி 10 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷஃபான் 10 (26.09.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ்:361



ரொறன்ரோவில் நடைபெற்ற பொங்கு தமிழ் நிகழ்விலிருந்து......



## ரொறன்ரோ வரலாறு காணாத காட்சி

# பல்லாயிரம் தமிழ் மக்கள் திரண்ட

# கனடாவின் பொங்குதமிழ் நிகழ்வு!

(ரொறன்ரோ)

**இடைக்கால நிர்வாகசபையை அடிப்படையாகக் கெண்டு விடுதலைப் புலிகளுடன் அரசு உடனடியாகப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் –**

**கனடிய அரசாங்கம் இதற்கான அழுத்தங்களை இலங்கை அரசுக்குக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து**

**கனடா வாழ் ஈழத் தமிழர்கள் பல்லாயிரக் கணக்கில் ஒன்றுதிரண்டு நடத்தும் பொங்கு தமிழ் நிகழ்வு மிகப் பிரமாண்டமான முறையில் ரொறன்ரோ நகரில் நேற்று ஆரம்பமானது.**

கனடா நேரப்படி நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு (இலங்கை நேரம் இன்று அதிகாலை) ஆரம்பமான பொங்குதமிழ் நிகழ்வில் கலந்து

யத் தொடங்கினர்.

கனடாவின் தொலைதூரப் பகுதிகளிலும், அமெரிக்காவிலிருந்தும் பெருமளவிலான மக்கள் இங்கு

கான குரலாக பேச்சுவார்த்தையை வலியுறுத்தி ரொறன்ரோ வாழ் ஈழத் தமிழ்மக்கள் நடத்தும் பொங்கு தமிழ் நிகழ்வுகளினால் ஒன்றா

### நெல்லியடி முடக்காட்டுச் சந்தியில்

## கழுத்து வெட்டப்பட்ட நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்பு!



(வடமராட்சி)

நெல்லியடி முடக்காட்டுச் சந்திப் பகுதியில் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம்

**கனடா வாழ் ஈழத் தமிழர்கள் பல்லாயிரக் கணக்கில் ஒன்றுதிரண்டு நடத்தும் பொங்கு தமிழ் நிகழ்வு மிகப் பிரமாண்டமான முறையில் ரொறன்ரோ நகரில் நேற்று ஆரம்பமானது.**

கனடா நேரப்படி நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு (இலங்கை நேரம் இன்று அதிகாலை) ஆரம்பமான பொங்குதமிழ் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக நேற்றுக்காலை 8.30 மணிக்கே மக்கள் ஒன்று குவியத் தொடங்கினர்.

கனடாவின் தொலைதூரப் பகுதிகளிலும், அமெரிக்காவிலிருந்தும் பெருமளவிலான மக்கள் இந்த நிகழ்வுக்காக வந்திருந்தனர்.

ஈழத்தமிழினத்தின் விடுதலைக்கான குரலாக பேச்சுவார்த்தையை வலியுறுத்தி ரொறன்ரோ வாழ் ஈழத் தமிழ்மக்கள் நடத்தும் பொங்கு தமிழ் நிகழ்வுகளினால் ஒன்ராறியோ நாடாளுமன்றத்திடல் திக்குமுக்காடியதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவித்தன.

எங்கு பார்த்தாலும் தமிழர்களின் தலைகளே தெரிவதாகவும் ஒன்றாறியோ நாடாளுமன்ற திடலையொட்டிய வீதிகளனைத்தும் சன

(12 ஆம் பக்கம் பார்க்க)



**மரணம் ஒரு தடவை தான் வரும். அதற்காக மானத்தை விற்றுச் சீவிக்க முடியுமா? இறப்புக்குப் பயந்து இனத்தை அழியவிட முடியுமா?**

**– தியாகி திலீபன்**



(வடமராட்சி)

நெல்லியடி முடக்காட்டுச் சந்திப் பகுதியில் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

ராஜகிராமம் - கரவெட்டி மேற்கு கரவெட்டியைச் சேர்ந்த செல்வராசா மோகன் (வயது - 22) என்பவரே கழுத்து வெட்டிப் படுகொலை செய்யப்பட்டவர் என இனங்காணப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஆவரங்கால் விபத்தில் குடும்பஸ்தர் மரணம்!

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் பகுதியில் மோட்டார் சைக்கிளும், கன்ரர் வாகனமும் மோதி விபத்துக்குள்ளான சம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவர் அந்த இடத்திலேயே பரிதாபகரமாக மரணமானார். நேற்றுக் காலை ஆவரங்கால் சிவன் கோவில் அருகே இடம் பெற்ற இந்தச் சம்பவத்தின் போது - கரவட்டி கிழக்கு கரவெட்டியைச் சேர்ந்த 53 வயதான கந்தன் குணசிங்கம் என்பவரே மரணமடைந்தவராவார்.

ஆவரங்கால் சிவன்கோவிலடிப் பகுதியில் யாழ் - பருத்தித்துறை வீதியில் வந்த மோட்டார் சைக்கிளும், கன்ரர் வாகனமும் மோதிக் கொண்ட போதே - இந்த விபத்து ஏற்பட்டது.

இதில் மோட்டார் சைக்கிளில் வந்த குடும்பஸ்தர் அந்த இடத்திலேயே மரணமானார். இறந்தவரின் சடலம் உடனடியாக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு எடுத்துவரப்பட்டது. கன்ரர் வாகன சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். மரணமான நபரின் சடலம் பிரேதப் பரிசோதனைக்குப் பின்னர் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. (தீ,111)

# திலீபன் நினைவு நாள் நிகழ்வுகளில் பொதுமக்களை அணிதிரள அழைப்பு



தியாகதீபம் லெப். கேணல் திலீபனின் 17 ஆவது ஆண்டு நினைவு நாளின் இறுதிநாளான இன்று நடைபெறவுள்ள உண்ணாவிரத நிகழ்வில் பொதுமக்கள் அனைவரும் தமது அன்றாட பணிகளை நிறுத்தி உண்ணாவிரத நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

திலீபனின் நினைவாக யாழ் குடாநாடு எழுச்சிக்கோலம் பூண்டுள்ளது.

வீதிகள், பொது இடங்கள், அரச மற்றும் தனியார் திணைக்களங்களில் விசேடமாக நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டு சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

சந்திகள், பொது இடங்களில் ஒலிபெருக்கிகள் கட்டப்பட்டு எழுச்சிக்கீதங்கள் ஒலிக்கப்படுகிறது.

இறுதிநாளான இன்று யாழ். குடாநாட்டிலுள்ள ஒவ்வொரு கோட்டத்திலும் விசேடமாக நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டு உண்ணாவிரத நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

மேலும், இன்றையதினம் வலிகாமம் கோட்டத்தில் நல்லூர்க் கந்தன் ஆலய முன்றலிலும், தென்மராட்சிக் கோட்டத்தில் சங்கத்தானை முருகமூர்த்தி ஆலய முன்றலிலும், வடமராட்சிக் கோட்டத்தில் அல்வாய் முத்துமாரியம்மன் கோவில முன்றலிலும், தீவகக் (12 ஆம் பக்கம் பார்க்க)




இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...

# தமிழீழ கல்விக்கழகம் நடத்திய திலீபன் நினைவு போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் 17 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தமிழக் கல்விக் கழகத்தின் யாழ்.மாவட்டப் பிரிவு-மாணவர்களிடையே நடத்தப்பட்ட கட்டுரை, கவிதை, சிறுகதை, பொது அறிவு ஆகியவற்றின் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தப் போட்டியில் யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்கள், தேசிய கல்வியியற் கல்லூரி, ஆசிரியர் கலாசாலை ஆகியவற்றில் கல்வி பயிலும் மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

இந்தப் போட்டிகளில் - வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் கோட்ட மட்டத்தில் நடைபெறும் இறுதிநாள் நிகழ்வுகளில் வைத்து வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம், வலிகாம் ஆகிய வலயங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு நல்லூர் ஆலய முன்றலிலும்,

வடமராட்சி வலயத்தைச் சேர்ந்தவர்களுக்கு அல்வாய் முத்துமாரி அம்மன் கோவில் முன்றலிலும்,

தென்மராட்சி வலயத்தைச் சேர்ந்தவர்களுக்கு சங்கத்தானை முருகன் ஆலய முன்றலிலும்,

தீவகத்தைச் சேர்ந்தவர்களுக்கு புளியங்கூடல் முத்துமாரி அம்மன் கோவில் முன்றலிலும் வழங்கப்படவுள்ளன.

இந்தப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களின் விபரங்கள் வருமாறு :

## கீழ்ப்பிரிவு - கட்டுரை

*யாழ்.வலயம்*

முதலாம் இடம் - ப.ஜீனிகா (ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம்).

இரண்டாம் இடம - அ.கஜபனா (கோண்டாவில் இந்து வித்தியாலயம்).

மூன்றாம் இடம் - ந.ஜஸ்மின் (பெரியபுலம் மகா வித்தியாலயம்).

*வலிகாமம் வலயம்*

முதலாம் இடம் - வி.கோகுலன் (யூனியன் கல்லூரி).

இரண்டாம் இடம - ம.கவியரசி (மகாஜனாக் கல்லூரி).

மூன்றாம் இடம் - சி.நிரோஜா (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில வித்தியாலயம்).

*தென்மராட்சி வலயம்*

முதலாம் இடம் - ஜெ.ஜெயதர்சினி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

இரண்டாம் இடம - க.கன்சியா (மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்)

மூன்றாம் இடம் - சி.நிறோசினி (விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்).

*வடமராட்சி வலயம்*

முதலாம் இடம் - சி.சிவசங்கர் (ஹாட்லிக் கல்லூரி).

இரண்டாம் இடம - சி.றஜுபனன் (ஹாட்லிக் கல்லூரி).

மூன்றாம் இடம் - தெ.பிரணவன் (ஹாட்லிக் கல்லூரி).

## மத்தியபிரிவு-கவிதை

*யாழ்.வலயம்*

முதலாம் இடம் - வி.புவி (வேம்படி மகளிர் கல்லூரி).

இரண்டாம் இடம - ந.தனுசியா (கோண்டாவில் இந்து வித்தியாலயம்).

மூன்றாம் இடம் - யோ.தாரணி (கொக்குவில் இந்துக் கல்லூரி).

*வலிகாமம் வலயம்*

முதலாம் இடம் - ப.கிரிசா (பிரான பற்று கலைமகள் வித்தியாலயம்).

இரண்டாம் இடம - யோ.சுதாகரன் (தெல்லிப்பளை யூனியன் கல்லூரி).

மூன்றாம் இடம் - அ.எடிசன் அரிக்சன் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில வித்தியாலயம்).

*வடமராட்சி வலயம்*

முதலாம் இடம் - பா.மயூரி (வட இந்து மகளிர் கல்லூரி).

இரண்டாம் இடம - வெ.துஷ்யந்தன் (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்)

மூன்றாம் இடம் - க.ரூபிதா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

*தென்மராட்சி வலயம்*

முதலாம் இடம் - த.யுறூக்கஸ் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

இரண்டாம் இடம - ச.ஜனனி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

மூன்றாம் இடம் - த.மேனகா (இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்).

## மேற்பிரிவு-பொதுஅறிவு

*யாழ்.வலயம்*

முதலாம் இடம் - ம.அன்பரசன் (யாழ்.இந்துக் கல்லூரி).

இரண்டாம் இடம - ச.நடராசசர்மா (யாழ்.இந்துக் கல்லூரி).

மூன்றாம் இடம் - சீ.ருசாந்தினி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

*வலிகாமம் வலயம்*

முதலாம் இடம் - அ.கோகுலரமணன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி).

இரண்டாம் இடம - ந.சுகதீபன் (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி).

மூன்றாம் இடம் - நி.மான்மகள்

*வடமராட்சி வலயம்*

முதலாம் இடம் - செ.ஆன் தர்சிகா (விக்கினேஸ்வராக் கல்லூரி).

இரண்டாம் இடம - தி.கிருபாகரன் (ஹாட்லிக் கல்லூரி).

மூன்றாம் இடம் - அ.அனுதீபா (விக்கினேஸ்வராக் கல்லூரி).

*தென்மராட்சி வலயம்*

முதலாம் இடம் - த.உசாந் (மீசாலை வீரசிங்கம் ம.வி)

இரண்டாம் இடம - பா.உசாநந்தினி (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி).

மூன்றாம் இடம் - சி.சஞ்சீவன் (கைதடி முத்துக்குமாரசாமி ம.வி).

*தீவக வலயம்*

முதலாம் இடம் - சி.அசோக்குமார் (சேர்.வை.துரைச்சாமி ம.ம.வித்தியாலயம்).

இரண்டாம் இடம - இ.பிறேமலதா (சேர்.வை.துரைச்சாமி ம.ம.வித்தியாலயம்).

மூன்றாம் இடம் - இ.தயாளினி (கரம்பன் சிறிய புஸ்ப்ப மகளிர் கல்லூரி).

## சிறுகதைப் போட்டி

*"இலட்சிய வேட்கை"*

முதலாம் இடம் - செ.நேசநாயகம் (கோப்பாய் ஆசிரிய கலாசாலை).

*"அவாவும் ஆசைகள்"*

இரண்டாம் இடம - சோ.சி.சிவானந்தராசா (1 ஆம் வருடம் - சித்திரத்துறை - தேசிய கல்வியற் கல்லூரி).

*"நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்"*

மூன்றாம் இடம் - செ.லக்சுமிகாந்தன் (கோப்பாய் ஆசிரிய கலாசாலை).

# தியாக தீபம் திலீபன் நினைவாக புங்குடுதீவில் உண்ணாவிரதம்!

(புங்குடுதீவு)

தியாகி லெப்.கேணல் திலீபனின் 17 ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு புங்குடுதீவு பெருங்காடு சிறி முத்துமாரியம்மன் கல்யாண மண்டபத்தில் அடையாள உண்ணாநோன்பு நேற்று முன்தினம் நடைபெற்றது.

புங்குடுதீவு பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் புங்குடுதீவு கணேச மகாவித்தியாலய அதிபர் எஸ்.கே.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் -

பொதுச்சுடரினை சிவசிறி அருணோதயக்குருக்கள் எற்றிவைத்தார். தேசியக்கொடியினை புங்குடுதீவு பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் இசைச்செல்வன் எற்றிவைத்தார். தொடர்ந்து தியாகி திலீபனின் திருவருவப்படத்துக்கு ஈகச்சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் - சிறப்புரையினை யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடகப் பேசாளர் ப.கனகலிங்கம் ஆகியோர் ஆற்றினர்.

இதன் சிறப்பு நிகழ்வாக, புங்குடுதீவு தியாகி திலீபன் மருத்துவமனையால் முதலுதவி பயிற்சி அளிக்கப்பட்டு அதிவிசேட சித்திகளைப் பெற்ற மாணவிகளுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

புங்குடுதீவு மகா வித்தியாலயம், கணேச மகாவித்தியாலயம், சிறிசுப்பிரமணி மகளிர் வித்தியாலயம், கமலாம்பிகை மகா வித்தியாலயம், சிறி சித்திவிநாயகர் மகாவித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றது.

இந்தநிகழ்வில் - ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், தேசிய எழுச்சிப் பேரவையின் உறுப்பினர்கள் ஆகியோர் பங்குபற்றினர்.

இறுதியில் நீராகாரம் வழங்கி உண்ணாநோன்பு முடித்து வைக்கப்பட்டது.

# கல்வி அபிவிருத்திக்கு கிராமிய நிறுவனம் உதவி

கிராமிய பொருளாதார நிறுவனம் யாழ்.குடாநாட்டில் பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் மக்களின் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உதவி மேற்கொண்டு வருகிறது.

போரினால் பாதிக்கப்பட்ட மற்றும் இடம்பெயர்வு போன்ற பிரச்சினைகளை எதிர்நோக்கிய கிராமங்களை மையமாக வைத்தே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வறுமையால் கல்வியை இடைநிறுத்தியவர்களை மீண்டும் கற்றல் நடவடிக்கைகளில் இணைத்தல், கற்றல் உபகரணங்களை வழங்குதல் போன்ற ஊக்குவிப்பு வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

பாடசாலைகளில் மாணவர்களை ஆர்வம் கொள்ள வைத்து கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடவைக்கும் முகமாக கிராமமட்ட அமைப்புக்களுக்கு உதவி வழங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (14)

ராஜா யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
அர்ஜுன், லாரா தத்தா, விவேக், ரகுவரன் நடித்த

அரசாட்சி
காட்சிநேரம் 10.30, 2.30, 6.30, (பு.நே)
(சி-2725)

நாகம்ஸ் சுன்னாகம்
விஜய், சோனியா அகர்வால், வடிவேல் நடித்த
மதுர

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

நிரஞ்சனாஸ் சங்கானை
தனுஸ், சிந்துலானி கருணாஸ் மற்றும் மணிவண்ணன்

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
Return to two moon junction
(சி-2723)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 6.00 (பு.நே)

சிற்றி சினிமா பண்டத்தரிப்பு
நேற்று முதல் குதூகல ஆரம்பம்
விஜயகாந், நமீதா, பிரபுதேவா மற்றும் வடிவேல் நடிப்பில்

எங்கள் அண்ணா
(ரீல்ஸ்)
(சி-3195)
எங்கள் அண்ணா
தினசரி காட்சிகள் : , 3.00, 7.00 (பு.நே)

## கண்ணீர் அஞ்சலி

**கௌரிமனோகரன் சுதாகரன் (சுதா)**

(கரன் எலக்றிக்கல் உரிமையாளர், கே.கே.எஸ்.றோட், தட்டாதெரு சந்தி)



ஆருயிர் நண்பனின் திடீரென அமரத்துவம் அடைந்த செய்திகேட்டு நாம் அதிர்ச்சியடைந்தோம் இவருடைய இழப்பினால் துயர் அடைந்துள்ள அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின்ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

- நண்பர்கள் -

சரண்யா தொலைத் தொடர்பகம்
வரதன் எலக்றிக்கல்
*கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
கனகராசா இரும்புத் தொழிலகம்
*நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம்.*

(944)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

புவியில்



விண்ணில்

1957.03.26 2003.09.26

**வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம்**

*மலரோடு மணமாய் மதியதில் ஒளியாய்*
*உலகினர் போற்ற எனதரும் தலைவா,*
*மகிழ்வோடு வாழ்ந்த நிலையது கண்டு*
*மலரவன் தன்னடி உமையழைத்தானோ,*
*பகலிரவென்று மிப்புவி சுழன்றிடினும்*
*பாவியும் மலரடி பணிந்திங்கு போற்றுவேன்.*

*உயிர் பிரிந்த உமதுடலை ஊர்சுமந்தபோது*
*உணர்விழந்து நாமிருந்த ஓர்பொழுதிலந்த*
*உறவுகளின் உதவிகளை என்னவென்று சொல்ல...!*
*ஓராண்டு கடந்தபின்னும் கரம் குவித்து நின்றோம்.*
*சிரம் தாழ்த்தி எங்களது நன்றியினைத் தந்தோம்...!*

8, இராச வீதி, நல்லூர்.

மனைவி, குடும்பத்தினர்.

(C/3196)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
அநேக மாணவர்களின் வேண்டுகோளிற்கிணங்க கீழ்வரும் பாடநெறிகளுக்கான புதிய பிரிவுகள் 26.09.2004 முதல் ஒவ்வொரு வாரமும் ஆரம்பமாகவுள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்!
மாணவர்கள், அலுவலர்களிற்கான வேறுபட்ட பிரிவுகள்!
வார, வார இறுதி, மாலை நேர, இரவு நேர வகுப்புகள்!
இலகு தமிழ் விளக்கங்களுடன் ஆழமான கற்பித்தல்!
அனைத்து மாணவர்களுக்கும் இலவச Floppy Diskket / CD Handouts
குறைவான கட்டணத்தில் நிறைவான அங்கீகாரம்

DIPLOMA COURSES
- Diploma in MS Office
- Diploma in Desktop Publishing
- Diploma in AutoCad
- Diploma in Hardware
- Diploma in Multimedia
Duration: 03 Months
Certificate Courses:
Excel, Access, Word, Java, C/C++, CorelDraw & Photoshop
அனைத்துப் பிரிவுகளிற்குமான அறிமுக வகுப்புக்கள்
எதிர்வரும் 29.09.2004 மாலை 4.00, 03.10.2004 காலை 10.00 ஆரம்பமாகின்றன.
eTouch COMPUTER SYSTEM
"The right way to touch IT"
உடுவில் வீதி, மருதனார்மடம், யாழ்ப்பாணம். தொ.பே. : 021-4590222

# மக்களுக்கு தகுந்த நிவாரணம் இன்றேல் ஜனாதிபதி மாளிகை முற்றுகையிடப்படும்!

## கோட்டை ஆர்ப்பாட்டத்தில் ராஜித

(கொழும்பு)

அடுத்துவரும் தமிழ் - சிங்கள புதுவருடத்துக்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சி தற்போதைய ஆட்சியைத் தோற்கடித்து ஆட்சியமைக்கும் என, ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பு ரயில் நிலையத்துக்கு முன்பாக, நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் பின்னர் பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் பேசும்போது -

நாட்டில் உரிய பொருளாதாரக் கொள்கை இல்லாத காரணத்தால் பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ளன. மக்கள் பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

அரசாங்கம் மக்களுக்கு உரிய நிவாரணத்தை வழங்கவேண்டும் இல்லையேல் நாடு முழுவதிலும் இருந்து ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களை ஒன்றுதிரட்டி ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் கட்சியின் பதில் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க - ஐக்கிய தேசியக் கட்சி தற்போதே தமது ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவை தேர்ந்தெடுத்துள்ளது. எனினும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இன்னமும் தமது ஜனாதிபதி வேட்பாளரைத் தேர்ந்தெடுப்பதில் பிரச்சினைகளை எதிர்நோக்குவதாகவும் தெரிவித்தார்.

# மூதூரில் புலிகள் ஊடுருவலா?

## இராணுவப்பேச்சாளர் நிராகரிப்பு

திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூரில் நேற்றுமுன்தினம் ஆயுதம் தாங்கிய விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து , இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் ஊடுருவியதாக வெளியான தகவலை இராணுவப்பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா நிராகரித்துள்ளார்.

மூதூர் பனிச்சனூர் கிராமத்தின் ஊடாக இந்த ஊடுருவல் இடம்பெற்றதாகச் செய்திகள் வெளியாகின. கறுப்புச் சருடை அணிந்த சுமார் 13 தமிழீழ விடுதலைப்புலிகள் இவ்வாறு ஊடுருவிச்சென்றதை, போர் நிறுத்த உடன்பாட்டுமீறல் சம்பவம் என்ற அடிப்படையில், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு முறையிடப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்ததாகவும் செய்திகள் வெளியாகின.

எனினும் இந்தச் செய்தி தம்மால் வழங்கப்படவில்லை என இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா தெரிவித்தார். எனினும், இராணுவத் தலைமையகத்தால் கடந்த வியாழக்கிழமை வெளியிடப்பட்ட அறிக்கையில் மூதூர்ப்பகுதியில் புலிகள் ஊடுருவியதாகக் கூறப்பட்டிருநதமை குறிப்பிடத்தக்கது.

# சமாதான ஓட்டநிகழ்வு நேற்றுமுன்தினம் ஆரம்பம்

(கொழும்பு)

சமாதானத்தை வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் சமாதான ஓட்ட நிகழ்வு நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது. தமிழர் தாயகப் பிரதேசங்களில் நேற்றுமுன்தினம் காலை 9 மணிக்கு ஆரம்பமான சமாதான ஓட்டநிகழ்வு, இன்று கண்டியில் முடிவடையவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.மாவட்டம், கிளிநொச்சி மாவட்டம், வவுனியா மாவட்டம், திருகோணமலை மாவட்டம், அம்பாறை மாவட்டம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வீர வீராங்கனைகள் இந்த ஓட்டநிகழ்வில் பங்குபெறுகின்றனர்.

நாடளாவிய ரீதியில் 12 மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் பங்குகொள்ளும் இந்த நிகழ்வு சம்பந்தமான விசேட நிகழ்வுகள் வவுனியா செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதன்போது மதகுருமார், தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர், வவுனியா அரச அதிபர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கல்வியில் பின்தங்கிய மாவட்டமாக மட்டக்களப்பு பிரகடனப்படுத்தப்படும்

## மானியங்கள் ஆணைக்குழு இணக்கம்

(மட்டக்களப்பு)

மடடக்களப்பு மாவட்டத்தை கல்வியில் பின்தங்கிய மாவட்டமாகப் பிரகடனப்படுத்துவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், பேராசிரியர் வி.ஆர்.என்மெண்டிஸ் தலைமையிலான மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர்களுக்குமிடையில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற சந்திப்பில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டம் கல்வியில் முன்னேற்றமடைந்த மாவட்டமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதால், பல்கலைக்கழக அனுமதி உட்பட உயாகல்விக்கு அனுமதிபெறும் மாணவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படுகின்றது என நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தச் சந்திப்பில் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இந்தச் சந்திப்பில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி எதிர்வரும் 30 ஆம் திகதி பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு கூடி இதற்கான அங்கீகாரத்தை வழங்கும். அதன் பின்பு இந்த தீர்மானம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்படும்.

குறிப்பிட்ட சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜோசப் பரராஜசிங்கம் பா.அரியநேத்திரன், எஸ்.ஜெயானந்தமூர்த்தி, த.கனகசபை, தங்கேஸ்வரி கதிர்காமர் மற்றும் கே.பத்மநாதன ஆகியோர் கலந்துகொண்டனர். (01)

# அரிசி, சீனி, பருப்பு போன்றவற்றின் வற் வரியை நீக்க ஆலோசனை!

(கொழும்பு)

அரிசி, சீனி, பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருட்களின் மீது சுமத்தப்பட்டுள்ள வற் வரியை நீக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அமைச்சர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

வாழ்க்கைச் செலவு உயர்ந்து செல்வதனால் துன்பங்களைச் சுமக்கும் மக்களுக்காக இந்தப் பொருட்கள் மீதான வரியைக் குறைப்பது சிறந்ததொன்றாகும்.

தற்போது ஒரு கிலோ அரிசிக்கு 9 ரூபா வற் வரியும், சீனி, பருப்பு ஆகியவற்றுக்கு 15 வீத வற் வரியும் சேர்க்கப்பட்டுள்ளமையால், அவற்றுக்கான விலை அதிகரித்துள்ளது. இதனால் வரியை நீக்கிப் பொருட்களின் விலையைக் குறைக்கவேண்டும் எனவும் அமைச்சர்களுக்குப் பிரதமர் பரிந்துரைத்துள்ளார்.

இதேவேளை 5 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு கூட்டுறவு விற்பனை நிலையத்துக்கும், பாவனையாளர் சங்கத்திற்கும் 15 கோடி ரூபாவை பொதுத்திறைசேரி பிணையாக வழங்கவேண்டும் எனவும் பிரதமர் ஆலோசனை வழங்கியுள்ளார். இதைத் தவிர சனியின் தேவையின் பொருட்டு கந்தளாய் மற்றும் ஹங்குராங்கொட சீனித் தொழிற்சாலைகளை உடனடியாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (தே)

# கையெழுத்து திரட்டும் போராட்டம் கண்டியில் ஆரம்பமானது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் சில நிபந்தனைகளை அவர்கள் நிறைவேற்றவேண்டும் எனக் கோரி ஜாதிக ஹெல உறுமய கையெழுத்துத் திரட்டல் போராட்டத்தை நேற்றுமுன்தினம் கண்டியில் ஆரம்பித்தது.

தமழீழ விடுதலைப் புலிகள் தமது ஆயுதங்களைக் கைவிடுவதற்கு இணங்கவேண்டும். மற்றும் தமது கரும்புலிகள் படையணியைக் கலைத்துவிடவேண்டும். என்ற நிபந்தனைகளும் ஹெல உறுமயவின் கோரிக்கைகளில் அடங்குகின்றன.

இது தொடர்பாக நாடளாவிய ரீதியில் 50 லட்சம் பேரின் கையொப்பங்களைத் திரட்டி அதனை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் சமர்ப்பிக்க ஜாதிக ஹெல உறுமய திட்டமிட்டுள்ளது.

# வாய் பேச முடியாதோர் கொழும்பில் போராட்டம்

கொழும்பு மோட்டார் வாகன திணைக்களத்துக்கு முன்னால் வாய் பேசமுடியாதவர்கள் நேற்று போராட்டம் ஒன்றை நடத்தினர்.

இலங்கையில் தமக்கு வாகனச் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதில்லை என்ற விடயம் தமது உரிமையைப் பாதிக்கும் செயல் என்பதால், அதனை ரத்துச்செய்து தமக்கும் வாகன சாரதி அனுமதிபத்திரங்கள் வழங்கவேண்டும் எனக் கோரியே இந்தப்போராட்டத்தை அவர்கள் நடத்தினர்.

பின்னர் இவர்கள் பொதுக்கூட்டம் ஒன்றை அங்கு நடத்தியதுடன் மோட்டார் வாகன திணைக்கள ஆணையாளரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

# தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் பௌத்த பீடாதிபதிகளைச் சந்திப்பர்

(கொழும்பு)

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடுத்த மாதம் முதல் வாரத்தில் பௌத்த பீடாதிபதிகளைச் சந்தித்து இன்றைய அரசியல் நிலைமைகுறித்துப் பேச்சுக்களை நடத்தவிருப்பதாக தெரியவருகிறது.

மல்வத்த பீடாதிபதி மற்றும் அஸ்கிரிய பீடாதிபதி ஆகியோரைச் சந்தித்தே கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேசவுள்ளனர். இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான பேச்சுக்களின் தற்போதைய நிலை குறித்தும், விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனை தொடர்பாகவும் பௌத்த பீடாதிபதிகளுக்கு கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் விளக்கமளிக்கவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (தே) (01)

## இரு பிரதான கட்சிகளும் இணைந்து கூட்டாட்சி அமைக்கவேண்டும்!

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலையைக் கருத்திற்கொண்டு இரு பிரதான கட்சிகளின் தலைவர்களும் இணைந்து தொடரும் 5 ஆண்டுகளுக்காவது மத்தியில் கூட்டாட்சியை அமைத்து இனப்பிரச்சினையைத் தீர்க்க முன்வரவேண்டுமென, லண்டன் பௌத்த அமைப்பின் தலைவர் வண.கலயல்ல பியதசி மகாநாயக்க தேரர் கோரியுள்ளார்.

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

சிறுபான்மைக் கட்சிகளெல்லாம் ஒன்றிணைந்து குரல்கொடுத்துவரும் தற்போதைய நிலைமையில், இரு பிரதான சிங்களக் கட்சிகள் மோதிக்கொண்டிருப்பது, சிங்கள இனத்தின் எதிர்காலத்தை இருளடைய வைத்துவிடும் என்று கவலை தெரிவித்துள்ள இந்த தேரர், தங்களது அரசியல் பதவி, புகழை விட்டுக்கொடுத்து - நாட்டின் நலன்கருதி இருவரும் கூட்டாட்சி அமைப்பது அவசியம் என்று வலியுறுத்தியுள்ளார்.

தற்போது நாட்டில் நிலவுவது அரசியல் குழப்பம் மட்டுமே, இனப்பிரச்சினையல்ல என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பசுவதைச் சட்டத்தை அமுல்படுத்துமாறு ஹெல உறுமய பிரேரணை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

பசுவதைத் தடைச்சட்டத்தை அமுல்ப்படுத்துமாறுகோரி நாடாளுமன்றில் பிரேரணை ஒன்றினை ஹெல உறுமய சமர்ப்பித்துள்ளது. இது தொடர்பாக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினரான வண. கொலன்னாவ சுமங்கள தேரர் தெரிவித்துள்ளதாவது -

இந்த நாடு எங்களுடையது. இதற்குப் பெயர் தர்மராஜ்ஜியம். எனவே மனிதநேயமற்ற இந்தப் பசுவதை உடனடியாக நிறுத்தப்படவேண்டும். இல்லையெனில் இதற்கெதிராக விரைவில் நாம் போராட்டத்தில் குதிப்போம் எனத் தெரிவித்தார்.

பசுவதைத் தடைச்சட்டத்தை ஐககிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கம் கொணடுவருமென விவசாய அமைச்சர் அநுரகுமார திஸநாயக்க உறுதியளித்தார்.

இதேவேளை, ஹெல உறுமயவின் இந்த நடவடிக்கைக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் புத்திரசிகாமணி தனது ஆதரவைத் தெரிவித்தார்.

# கொலைக் குற்றவாளிக்கு மரணதண்டனை தீர்ப்பு!

(வவுனியா)

வவுனியா மேல்நீதிமன்றில் நேற்றுமுன்தினம் கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட ஒருவருக்கு நீதிவான் ஜே.விஸ்வநாதன் மரணதண்டனை வழங்கித் தீர்ப்பளித்தார்.

இந்த தீர்ப்புக்குரியவர் நீதிமன்றில் ஆஜராகாத நிலையிலேயே நீதிவான் இந்த தீர்ப்பை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

1999 ஆம் ஆண்டு ஜுன்மாதம் இரண்டாம் திகதி வவுனியா சிதம்பரபுரம் பகுதியைச் சேர்ந்த ரங்கசாமி-பாலசிங்கம் என்பவரை தடியால் அடித்துக் கொலைசெய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சிதம்பரபுரத்தைச் சேர்ந்த பெருமாள் - தங்கராசா என்பவர் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் கைதுசெய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருந்தார்.

ஆனாலும், இவர் பின்னர் வவுனியா மாவட்ட நீதிமன்றினால் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். விடுதலையாகிவந்த இவர் தலைமறைவான நிலையில் நேற்றுமுன்தினம் நடந்த வழக்கிலும் இவர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. இந்த நிலையில் வவுனியா நீதிவான் நேற்றுமுன்தினம் இவருக்கு மரணதண்டனை வழங்கித தீர்ப்பளித்தார்.

# மின் கம்பியில் சிக்கி இளைஞன் உயிரிழப்பு

வவுனியா குருந்துப்பிட்டிய என்னும் இடத்தில் காட்டு விலங்குகளுக்கு என இணைக்கப்பட்ட மின்சாரக்கம்பியில் சிக்கிய சிங்கள இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இநதச் சம்பவத்தில் வவுனியா குருந்துப்பிட்டியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான சமிந்த ஜெயலத் (வயது 24) என்பவரே உயிரிழந்தவராவர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது -

இவரது வீடு அமைந்துள்ள பின்புறம் காடு அமைந்துள்ளது. எனவே, காட்டு விலங்குகளிடமிருந்து பாதுகாப்புத்தேடும் வகையில் சுமார் 160 மீற்றருக்கு மின் இணைப்பு பொருத்தப்பட்டிருந்தது.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம இந்தப்பகுதிக்கு மான் ஒன்று வந்துள்ளது. இந்த மானைப் பிடிப்பதற்காக குறித்த நபர் மின்சார வயர் இணைக்கப்படடிருந்ததையும் கவனிக்காது ஓடிய வேளையில் அவர் மின்சாரத்தால் தாக்கப்பட்டு உயிரிழந்தார்.

### ஈராக்கின் பலூஜா நகரில்

# அமெரிக்கப் படையினர் தாக்குதல்; 8 பொதுமக்கள் பலி, 15 பேர் காயம்



(பலூஜா)

ஈராக்கின் பலூஜா நகரில் அமெரிக்கப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் எட்டுப் பேர் கொல்லப்பட்டதுடன், 15 பேர் காயமடைந்தனர்.

பலூஜா நகர் மீது அமெரிக்கப் படையினர் தாங்கிகள், போர் விமானங்கள் ஆகியவற்றின் உதவியுடன் தாக்குதலை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கப் படையினரின் தாக்குதலால் பலூஜா நகரிலுள்ள கட்டடங்கள் பலவும் இடிந்து வீழ்ந்ததாக இந்தச் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

அபு முசாப் அல் சர்காவி தலைமையிலான ஆதரவாளர்கள் கட்டடம் ஒன்றில் கூட்டமொன்றை நடத்திக் கொண்டிருந்ததாகவும், அந்தக் கட்டடம் மீதே தாம் தாக்குதல் நடத்தியதாகவும் அமெரிக்கப்படை தெரிவித்தது.

தீவிரவாதிகள் இந்தக் கட்டடத் தொகுதியில் அமெரிக்க கூட்டுப் படைகளுக்கு எதிராக பாரிய தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கு திட்டமிட்டுக் கொண்டிருந்த வேளையிலேயே இந்தத் தாக்குதல் இடம் பெற்றதாக அமெரிக்க புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்தன.

தாக்குதல் இடம்பெற்ற சமயம் அப்பகுதியில் பொதுமக்கள் எவரும் இருக்கவில்லை என அமெரிக்கப் படையினர் தெரிவித்துள்ளபோதும், பலூஜா நகர வைத்தியசாலை தகவல்கள் பொதுமக்களும் கொல்லப்பட்டதாகத் தெரிவித்தது.

இந்தத் தாக்குதலின்போது கொல்லப்பட்டவர்கள் மற்றும் காயமடைந்தவர்கள் அனைவரும் பொதுமக்கள் எனவும், இவர்களுள் பெண்களும், குழந்தைகளும் அடங்குவதாகவும் பலூஜா நகர வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, பாக்தாத்திலுள்ள இராணுவத்துக்கு ஆட்சேர்க்கும் மையம் ஒன்றின் மீது ஈராக்கியத் தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் 7 ஈராக்கிய தேசிய படையினர் கொல்லப்பட்டனர்.

மேலும், றமாடி நகரில் தீவிரவாதிகள் மேற்கொண்ட மற்றுமொரு தாக்குதலில் 3 அமெரிக்கக் கடற் படையினர் கொல்லப்பட்டனர்.

# பலஸ்தீன குடியிருப்புக்கள் இஸ்ரேல் படையால் தரைமட்டம்

பலஸ்தீனத்தின் காஸா பகுதியிலுள்ள கான் யுனிஸ் அகதி முகாம் பகுதியிலுள்ள பலஸ்தீனர்களின் பெருமளவு வீடுகளை இஸ்ரேல் படையினர் புல்டோசர்கள் மூலமாக தகர்த்தழித்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் உதவிப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

ஜெவிஸ் குடியிருப்பு பகுதி மீது இஸ்லாமிய கிளர்ச்சிவாதிகள் இந்த குடியிருப்பு பகுதிகளுக்குள்ளிருந்தே தாக்குதல் மேற்கொண்டதாகவும் - இதன் காரணமாகவே இப்பகுதியில் உள்ள வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டதாகவும் இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்தது.




இதேவேளை இந்தச் சம்பவம் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை இஸ்ரேலிய படையினர் இந்த முகாம் மீது நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் பலஸ்தீனப் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டார்.

கொல்லப்பட்டவர் பலஸ்தீன ஆயுததாரி என இஸ்ரேலியப் படையினர் தெரிவித்தபோதும், உயிரிழந்தவர் 55 வயதுடைய பலஸ்தீனப் பொதுமகன் என பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, கான் யுனிஸ் பகுதிக்கு நேற்றுமுன்தினம் இரவு பிரவேசித்த இஸ்ரேலிய படையினரின் தாங்கிகள் மற்றும் புல்டோசர்கள் தொடர்ந்தும் பலஸ்தீன பொதுமக்களின் வதிவிடங்களை இடித்து அழித்து வருவதாகத் தகவல்கள் தெரிவித்தன.

# தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த உக்ரைன் பிரதமர் மீது முட்டை வீச்சு

முன்னாள் சோவியத் யூனியனின் ஒரு பகுதியாக இருந்தது உக்ரைன். ரஷ்யா சிதறுண்டபோது தனியாக பிரிந்த நாடுகளில் உக்ரைனும் தனி நாடானது.

உக்ரைன் பிரதமர் தேர்தல், அடுத்த மாதம் 31ஆம் திகதி நடக்கிறது. இந்தத் தேர்தலில் இப்போது பிரதமராக இருக்கும் விக்டர் யானு கோவிச் போட்டியிடுகிறார். இதையொட்டி அவர் தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார்.

பஸ்ஸிலேயே சுற்றுப்பயணம் செய்து விக்டர் யானு கோவிச் உக்ரைனின் மேற்குப் பகுதியில் பிரசாரம் செய்தார்.

பஸ்ஸிலிருந்து அவர் இறங்கியதும் அவரது ஆதரவாளர்கள் அவருக்கு ஆதரவாக கோஷம் எழுப்பினர். அதேநேரத்தில் எதிர்க்கட்சி




ஆதரவாளர்களும் அங்கு கூடிநின்று பிரதமருக்கு எதிராக கோஷமிட்டனர்.

அப்போது எதிர்க்கட்சித் தொண்டர்கள் மத்தியில் இருந்த ஒருவர் பிரதமரின் முகத்தில் ஒரு முட்டையை ஓங்கி வீசினார். பிரதமர் மூக்கில் இந்த முட்டை பட்டு உடைநதது.

இந்தத் தாக்குதலில் விக்டர் நிலை தடுமாறினார். அவர் மீது மேலும் தாக்குதல் நடக்காமல், பாதுகாப்பு ஊழியர்கள் அவரைச் சுற்றி வளைத்துக்கொண்டனர். பிரதமரைத் தாக்கிய 30 வயது வாலிபரை பாதுகாப்பு ஊழியர் மடக்கிப்பிடித்து விட்டார்.

முட்டை பலமாகத் தாக்கியதில் பிரதமர் விக்டர் யானு கோவிச் மயங்கிவிட்டார். உடனடியாக அவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்த முட்டை வீச்சுச் சம்பவத்துக்கும் தமக்கும் எந்தத் தொடர்பும் இல்லையெனவும் இது ஒரு தேர்தல் பிரசாரம் என எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

# பின்லேடனுக்கு ஆதரவாக பாகிஸ்தானில் நடந்த பேரணி



பாகிஸ்தானின் கராச்சி நகரில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கண்டனப் பேரணி நடைபெற்றது.

பேரணியில் கலந்து கொண்டவர்கள் பின்லேடன் படத்தை வைத்திருந்ததுடன், அவருக்கு ஆதரவு தெரிவித்து கோஷமும் எழுப்பினர்.

அமெரிக்க அதிபர் தேர்தலில் வெளிநாட்டில் வாழும் அமெரிக்கர்களின் வாக்கும் பெரும் பங்கு வகிக்கிறது. ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக் விவகாரத்தில் ஜோர்ஜ் புஷ்ஷின் நடவடிக்கைகள் தவறான விளைவுகளை ஏற்படுத்தி விட்டதாக வெளிநாட்டு அமெரிக்கர்கள் கூறுகிறார்கள்.

# கண்ணீர் அஞ்சலி



ஒன்றுமே சொல்லாமல் எங்குதான் சென்றாயோ?
எங்கள் இதயங்களில் நிறைந்திருந்த சுதாவே!
சிங்காரமாய் நீ சிறகடித்துப் பறக்கையிலே
தங்கத் தமிழாலே உன் குரலைக் கேட்கையிலே
எங்கள் சோகமெல்லாம் ஒரு நொடியில் மறைந்துவிடும்
பாங்காய் நீ பாரினிலே பவனி வருகையிலே
நாங்கள் எல்லாம் சேர்ந்து மகிழ்ந்து குழைந்திருந்தோம்
உன்றன் தாயருகில் உண்டு உறங்கிய நீ
ஒன்றுமே சொல்லாமல் எங்குதான் சென்றாயோ!

- ஓட்டுமடம் நண்பர்கள்.

## கௌரிமனோகரன் சுதாகரன்
## (உரிமையாளர் கரன் எலக்ரிக்கல்ஸ்)

# தியாகி திலீபனின் நினைவாக நெடுந்தீவில் மருத்துவ முகாம்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திசபை ஏற்பாட்டில் தியாகதீபம் லெப்டினன்ட் கேணல் திலீபன் ஞாபகார்த்தமாக இலவச வைத்திய முகாமும், இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வும் இன்று நெடுந்தீவு திலீபன் மருத்துவமனையில் நடத்தப்படவுள்ளது.

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை - வைத்திய அதிகாரி க.மயிலேறும்பெருமாள் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழவில் - யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வில் கண்பரிசோதனை, இரத்த அழுத்தம், சலரோகம் போனற நோய்களுக்கு சிகிச்சையளிக்கப்படும்.

கண்பரிசேதனை செய்து, மூக்குக் கண்ணாடி வழங்குவதற்குச் சிபார்சு செய்யப்பட்ட 200 பேருக்கு, மூக்குக் கண்ணாடி வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பன்னிரு திருமுறைப் பாராயணம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருமுறை மன்றம் மாதாந்த பௌர்ணமி தினத்தில் நடாத்திவரும் அகத்தியர் தேவாரத் திரட்டு, முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் சுழிபுரம் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தில், மன்றத்தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் அனைவரையும் பங்குபற்றும்படி இலங்கை திருமுறை மன்றத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

# 'போர் நடந்த மண்ணில்' நேற்று வெளியிடப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

'போர் நடந்த மண்ணில்' நூல் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் போராளி வெற்றிச்செல்வி தலைமையில் நடைபெற்றது.

இந்த வெளியீட்டு விழாவில் - ஈகச்சுடரை மாவீரர் அர்ச்சனாவின் தந்தையார், ஜெயசேகரம் அடிகளார் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து தேசியக் கொடியை புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் தமிழன்பன் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வின் சிறப்புரையை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட அரசியற்துறைப் துணை பொறுப்பாளர் செம்மணன் நிகழ்த்தினார்.

அடுத்து நூல் வெளியீட்டுரையை புலிகளின் குரல் நிறுவனத்தின் செய்தி ஆசிரியர் தவபாலன் நிகழ்த்தினார்.

இதில் நூலின் முதற்பிரதியை யாழ்.மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பள் கலைவிழி வெளியிட்டு வைக்க, அதனை தேசிய எழுச்சிப்பேரவைத் தலைவர் சொலமன் சூ.சிறில் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து யாழ்.மாவட்ட அரசியற்துறைப் துணை பொறுப்பாளர் செம்மணன் ஆக்கங்களை வழங்கிய படைப்பாளிகளுக்கு சிறப்புப் பிரதிகளை வழங்கினார்.



# சாதனையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு பரிசில் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்

சிசு உதான சாதனையாளர்கள் திட்டத்தின் மூலம், சாதனையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, பரிசில் வழங்கும் திட்டம் ஒன்றை மக்கள் வங்கி அறிமுகம் செய்துள்ளது.

இதற்கமைய, 2004 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 31 ஆம் திகதி வரை பாடசாலையில் கல்வி கற்று - விளையாட்டு, நாடகம், நடனம், சங்கீதம், ஓவியக்கலை, சூழல் பாதுகாப்பு கணினி தொழில்நுட்பம், பேச்சாற்றல் போன்ற துறைகளில் விசேட திறமைகள் உள்ளவர்கள் இந்தப் போட்டிக்கு விண்ணப்பிக்கமுடியும்.

விண்ணப்பப் படிவங்களை பாடசாலையிலோ அல்லது மக்கள் வங்கிக் கிளைகளின் மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பிப்பவர்கள் மாவட்ட ரீதியாக கௌரவிக்கப்படவுள்ளனர்.

25 மாவட்டங்களிலும் இருந்து தலா 5 சாதனையாளர்கள் வீதம் 125 பேர் தெரிவுசெய்யப்படவுள்ளதுடன், தேசிய மட்ட சாதனையாளர்கள் 10 பேர் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

மாவட்ட மட்ட வெற்றியாளர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபாவும், தேசிய மட்ட வெற்றியாளர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, சாதனைகளைத் தோற்றிவித்த - வசதி குறைந்த 10 பாடசாலைகளுக்கு தலா 50 ஆயிரம் ரூபா பாடசாலை அபிவிருத்திக்காக வழங்கப்படவுள்ளது என, மக்கள் வங்கியின் வட பிராந்திய செயற்றிட்டப் பணிப்பாளர் சி.இளம்பிறைநாதன் தெரிவித்தார்.

# கடற்தொழில் உபகரணங்கள் பெற்றுக்கொடுக்க ஏற்பாடு

கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்திலுள்ள செலான் வங்கி மூலம் வெளியிணைப்பு இயந்திரங்களை அங்கத்துவ சங்க பயனாளிகளுக்கு மாதாந்த கடன் அடிப்படையில் பெற்றுக்கொடுத்து வந்த யாழ்.மாவட்ட கடல்தொழிலாளர் கூட்டுறவுச் சமாசங்களின் சம்மேளனம்- தற்போது கடல்தொழில் உபகரணங்களை (வலை, கயிறு, மிதவைகள்)யும் பெற்றுக்கொடுப்பதற்குரிய ஒழுங்குகளைச் செய்து வருகிறது.

இதன் பயனாக - முதற்கட்டமாக வலிகாமம் வடக்கு கடல்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச அங்கத்துவ சங்கப் பயனாளிகள் பன்னிரண்டு பேருக்கு, தலா ஒரு லட்சம் ரூபா வீதம் பன்னிரண்டு லட்சம் ரூபாவை மாதாந்தக் கடன் அடிப்படையில் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை சம்மேளனத்தின் அனுசரணையுடன் மேற்கொண்டு வருவதாக, வலிகாமம் வடக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் ம.பயஸ் லோகநாதன் தெரிவித்தார். (21)

# வலி.கிழக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

கோப்பாய் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

வலி.கிழக்கு கோப்பாய் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி அசாந்த சீலன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்தக் கூட்டத்துககு, அனைத்துக் கிராம அலுவலர்களும், திணைக்களத் தலைவர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

இதில் மீள்குடியேற்றம் சம்பந்தமான கொடுப்பனவு விடயங்களும், பிறவிடயங்களும், திணைக்களரீதியான வேலைத்திட்டங்கள், பிரதேச சபை வேலைத்திட்டங்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் வேலைத்திட்டங்கள், கிராமமட்ட நிறுவனங்களின் வேலைத்திட்டங்கள், ஏனைய அபிவிருத்தித் திட்டங்கள் போன்ற முக்கிய விடயங்கள் சம்பந்தமாக ஆராயப்படவுள்ளன.

இக்கூட்டத்தை தொடர்ந்து விவசாயகுழுக்கூட்டமும் இடம்பெறவுள்ளதாகவும், இதில் இந்தப் பிரதேசத்திலுள்ள அனைத்து விவசாய சம்மேளனத்தைச் சேர்ந்தவர்களும், விவசாய திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் அழைக்கப்படவுள்ளதாக கோப்பாய் பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் அ.கதிரமலைநாதன் தெரிவித்தார்.

## சந்தேக நபர்கள் விளக்கமறியலில்

(கொடிகாமம்)

வரணி நாவற்காடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் வானொலிப்பெட்டி ஒன்று காணாமல் போனமை தொடர்பாக - கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரையும், கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்தபோது, அவர்கள் இருவரையும் ஒக்ரோபர் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் உத்தரவிட்டார். (29)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

தென்மராட்சிக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 29 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இடம்பெற இருப்பதால், அனைத்துப் பாடசாலை அதிபர்களையும் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார். (29)

## சேவைநலன் பாராட்டு விழா

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கடந்த பல வருடங்களாக ஆசிரியப் பணிபுரிந்த நா.தற்பரானந்தன், செ.இராஜேஸ்வரன், ஜீவா இரட்ணசபாபதி, கே.சுபத்திரா ஆகிய நாலு ஆசிரியர்களுக்கும் சேவை நயப்புவிழா நடைபெறவுள்ளது.

இந்த விழா - நாளை காலை 10 மணியளவில் யாழ்ப்பாணக் கல்லூரி பிரதான மண்டபமாகிய "ஒட்லி" மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விழா நாயகர்கள் சங்கரத்தைச் சந்தியிலிருந்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு, அதன் பின்னர் கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் தலைமையில் விழா நடைபெறவுள்ளது. (207)

# கொண்டலடி வைரவர் ஆலயவீதியை திருத்தவிடாது தடுத்த நிர்வாகத்தினர்

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள நல்லூர் கொண்டலடி வைரவர் ஆலயச் சூழலிலுள்ள வீதியைத் திருத்தவிடாது, ஆலய நிர்வாகத்தினர் தடுத்துள்ளமை குறித்து - அந்தப் பகுதி மக்கள் கடும் விசனம் தெரிவித்தனர்.

நல்லூர் கொண்டலடி வைரவர் ஆலயச்சூழலிலுள்ள வீதி - நெடுங்காலமாக திருத்தப்படாத நிலையில், அந்தப் பகுதி மக்கள் பலத்த சிரமங்களை அனுபவித்து வந்தனர். தற்போது யாழ்.மாநகரசபையின் ஏற்பாட்டில் இந்த வீதி திருத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது தார் ஊற்றப்படும் நிலையில் - இந்த வீதியைக் கிளறி, வீதி செப்பமிடுவதைத் தடுக்கும் நடவடிக்கையில் ஆலய நிர்வாகத்தினர் ஈடுபடுவதாக அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பாக ஆலய நிர்வாகத்தினர் மாநகரசபை ஆணையாளரிடம் தாங்கள் அனுமதி பெற்றுள்ளதாகவும் கூறியுள்ளனர்.

இதனால் இந்த வீதித்திருத்த வேலைகள் இடைநிறுத்தப்பட்டு, இந்த வீதிக்கென பாவிக்கப்பட இருந்த பொருட்களை வேறொரு வீதி செப்பமிடப் பாவிக்கவுள்ளதாகக் கூறி, பொருட்களை ஏற்ற வந்த மாநகர சபை ஊழியர்களை அந்தப்பகுதி மக்கள் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இந்த விடயம் தொடர்பாக எதிர்வரும் 29 ஆம் திகதி இருபகுதியினரையும் வைத்து, ஒரு தீர்வை எட்டவுள்ளதாக யாழ். மாநகரசபை ஆணையாளர் தெரிவித்தார்.



சங்கானை மாவடி இந்து இளைஞர் மகளிர் மன்றங்கள் இணைந்து நடாத்திய கலைவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சிவ.மகாலிங்கத்தை மன்றத் தலைவர் ச.சமலகாந்த் மலர்மாலை அணிவித்து வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

## சிரமதானப்பணி

2000 ஆம் ஆண்டு தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கை காரணமாக, முற்றாகச் சேதமடைந்து காணப்படும் கால்நடை வைத்திய அதிகாரி பணிமனை எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை சிரமதானம் மூலம் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ளவுள்ளது.

இந்தப் பணிமனை தற்போது கண்டி வீதி, சாவகச்சேரியில் தற்காலிக கட்டடமொன்றில் வசதிகள் எதுவுமின்றி இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (29)

## 765 ஆம் இலக்க பஸ்சேவை இடைநிறுத்தம்

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குரிய பருத்தித்துறை டிப்போவால் நடத்தப்படும் 765 ஆம் இலக்க பருத்தித்துறை - சாவகச்சேரி பஸ் சேவை தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் அரச ஊழியர்கள், வர்த்தகர்கள், மாணவர்கள் எனப் பல தரப்பட்டவர்களின் அன்றாட கருமங்கள் பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (14)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்
நான்காவது அகவையில்



பெயர் : பா.தாரணன்
முகவரி : கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.



பெயர் : ச.ரம்மியா
முகவரி : நல்லூர்

வாழ்க வளமுடன்
சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்

# விளையாட்டு அரங்கம்



## அர்ஜுனன் வில்

சர்வதேச கிரிக்கெட் உலகில் கடந்த சில நாட்களாக பல பரபரப்பான செய்திகள். இதில் முதன்மையானது ICC விருதுக்குத் தெரிவு செய்யப்பட்ட டெஸ்ட் அணியில் முரளிதரனுக்கு இடமில்லாமல் போனது. இது தொடர்பாக எழுதாத பத்திரிகைகளே இல்லை. அதுவும் கூடுதலாக முரளியின் பக்கம் அனுதாபம் சார்ந்ததாகவே அமைந்திருந்தன.

குறிப்பாக முரளியின் திறமை அபத்தமாகக் கேள்விக் குறியாக்கப்படும் போது முதல் குரல் எழுப்புபவர் முன்னாள் இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திரத் தலைவர் அர்ஜுன ரணதுங்க. முரளியைத் தவிர்த்தமை ஒரு கேலிக்கிடமான விடயம் என்று கூறியிருந்தார் அவர். இதோடு தொடர்பாக, முன்பும் ஒரு முறை அவர் விளையாடும் காலத்தில் முரளிக்குப் பங்கம் ஏற்பட்ட போது எந்தவித பாதிப்புக்கும் முகம் கொடுக்கும் திராணியில் முரளிக்காக நின்றவரும் அவரே. இதில் கவனிக்க வேண்டிய விடயம் என்ன வெனில், முன்னைய சம்பவத்தில் அர்ஜுனவின் பாத்திரத்தைக் கண்டித்த ICC, இம் முறை டெஸ்ட் அணித் தெரிவு விடயத்தில் அர்ஜுனவின் கருத்துக்கு, கருத்தெதுவும் தெரிவிக்காமல் மௌனம் சாதித்தது தான். இதிலிருந்து முரளியின் விடயத்தில் ஏதோ இசகுபிசகு நடந்து விட்ட தென்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது என்கிறார்கள் விமர்சகர்கள். மேலும் இன்னொரு விடயம் மெதுவாகக் கசிந்துள்ளது பத்திரிகைகள் வாயிலாக - அதாவது இந்த டெஸ்ட் அணியைத் தெரிவுசெய்யும் குழு அங்கத்தவர்களில் இருவர் - அதாவது மைக்கல் ஹோல்டிங் மற்றும் இயன் போதம் ஆகியோர் முரளியை அணிக்குள் கொண்டு வருவது தொடர்பில் தம் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தார்களாம். இதனால் தானோ என்னவோ - பிரதம தெரிவாளர் ரிச்சிபெனோ 'டெஸ்ட் ஆட்டத்தில் அதிகூடிய விக்கெட்டுக்கள் வீழ்த்தியவர், இந்த அணியில் இடம்பிடிப்பதில் துரதிஷ்டசாலியாகி விட்டார்' என்று பட்டும் படாமலும் தன் மனதுக்கு ஒத்தடம் கொடுத்துள்ளார் போலத் தெரிகின்றது.


முரளிதரன்
சந்தனை மரம்

இதெல்லாம் முக்கியமான விடயங்களாக இருக்க, இன்னொரு விடயத்தையும் இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும் ஆட்ட நிர்ணயம் தொடர்பில் முன்னாள் தென்னாபிரிக்க அணித் தலைவர் அமரர் ஹான்ஸி குரோணியே, இந்திய அணியின் முன்னாள் தலைவர் மொகமட் அஸாருதீன் போன்றவர்கள் என்ன பாடுபடுத்தப் பட்டார்கள் என்பதை சர்வதேச கிரிக்கெட் உலகம் நன்கு அறியும். ஒப்பிடும் போது ஊக்கமருந்துப் பாவனையில் சிக்கி, நிருபிக்கப்பட்டு ஒரு வருடம் சர்வதேச விளையாட்டில் இருந்து ஒதுக்கி வைக்கப்பட்ட ஷேன் வோணுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பது எந்தளவுக்கு தார்மீக ரீதியில் சரியென்ற ஒரு கேள்வியும் எழும்புவதைத் தடுக்கமுடியவில்லை.

ICC யின் இந்த விருதுகள் வழங்கும் திருவிழா 2004 ஆம் ஆண்டு முதன் முதலில் அறிமுகப் படுத்தப்பட்டது. தொடர்ந்து இந்தப் பெருமைமிக்க விருதுகள் வழங்கும் நிகழ்வு பெருமை நிறைந்த உயரபீடத்தால் நடைபெறப் போகிறது. அந்த நிகழ்வு இப்படி ஒரு கரும்புள்ளியுடன் தானா ஆரம்பிக்கப்பட வேண்டும்?

- நிர்மலன்


ரணதுங்க
உன்னத நண்பன்

## அரிச்சந்திரன் சொல்

இந்தவருட ICC சர்வதேச சிறந்த நடுவருக்கான விருதைப் பெற்றுக் கொண்டவர் அவுஸ்ரேலிய நடுவர் சைமன் டஃபல், இந்த விருது எந்த நடுவருக்குக் கிடைக்கும் என்ற ரசிகர் மத்தியில் பெரிதாக எதிர்வு கூறல்கள், விவாதங்கள் இல்லை. ஏனென்றால் நாள் முழுக்க மைதானத்தில் கால்கடுக்க நின்றும் நன்றியுடன் நினைக்கப்படாத பாவப்பட்ட பிறவிகள் என்றால் அது நடுவர்கள் தான்.

இந்த விடயம் பற்றித்தான் விருது நாயகன் பேசுகிறார். நாங்கள் இலகுவான இலக்குகள். லேசாக அடித்து வீழ்த்தி விடுகிறார்கள். நாங்கள் சரியான முடிவுகளை எடுக்கும் போது யாரும் கண்டு கொள்வதில்லை. ஆனால் ஒரு பிழைவிட்டால் காணும் எல்லோருமே விற்பன்னர்களாகி விடுகிறார்கள்.




மேலும், அவர் சொல்கிறார். 'கிரிக்கெட்டில் தொழில்நுட்பம் என்பது, மத்தியஸ்தர்களின் ஆற்றல்கள் தான். இந்தப் போட்டிக்கு முகம் கொடுத்து சிறந்ததொரு மத்தியஸ்தர்களாகி விடுகின்றேன். தொழில்நுட்பம் அவசியமற்றது என்று நான் கூறமுன்வரவில்லை. ஆனால் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது தொடர்பில் எச்சரிக்கையாக இருங்கள் எனறே கூற விரும்புகின்றேன். முற்று முழுதாக கிரிக்கெட் ஆட்டத்தில் தொழில் நுட்பம் நுழையுமாக இருந்தால் எந்தவொரு துடுப்பாட்ட வீரரும் ஓட்டச் சராசரி இருபதைத் தாண்டமுடியாது. அதேபோன்று டெஸ்ட் ஆட்டங்களும் மூன்று நாட்களுக்குள் முடிவதைத் தடுத்துவிட முடியாது என்கிறார்.

இன்றைய நாட்களில் மத்தியஸ்தர்கள் பற்றி நிறையவே பேசுகிறார்கள். இது ஒரு ஆரோக்கியமான மாற்றந்தான். இதன் மூலமாவது மத்தியஸ்தர்களின் முக்கியத்துவம் தெரியவரட்டும் என்பவர் முன்னைய காலங்களைப் போல் ஆறு பந்துகளைச் சரியாக எண்ணிவிட்டு அவுட் அல்லது அவுட் இல்லை என்று கூறிவிட்டு மைதானத்தை விட்டு அகன்று மறுநாள் இன்னொரு ஆட்டத்துக்கு மத்தியஸ்தம் செய்யச் செல்லும் தொழில் அல்ல இப்போது. நிதிவளம், அரசியல், அனுபவம் திறமை எல்லாம் கலந்து மிகப்பெரிய போட்டி நிலையில் விளங்குவது என்று முடிக்கிறார் சைமன் டஃபல்.

- பிரியா.

## கறை படிந்த நிலவுகள்

ஆட்ட மைதானத்தில் அட்டமத்துச் சனி இந்திய அணியை இப்போதைக்கு விட்டுவிடப் போவதில்லை என்பது போல் ICC சம்பியன் கிண்ணத்துக்கான போட்டியில் இந்தியா பாகிஸ்தானிடம் தோற்று மீண்டும் நிரூபித்துள்ளது.

இந்தப் போட்டி ஆரம்பமாவதற்கு முன்னர் **Pitch Report** வழங்கிய இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் சகலதுறை ஆட்டக்காரரான இயன்பொதம் நாணயச் சுழற்சியில் வெற்றி பெறுவோர் முதலில் களத்தடுப்பை மேற்கொள்வது நல்லது என்று கூறியிருந்தார்.

அவர் கூற்றை மெய்ப்பிப்பது போலவே இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசையை பாகிஸ்தானின் வேகப் பந்துவீச்சுப் படையணி நிர்மூலமாக்கியது. இருந்தபோதிலும், இந்தப் போட்டி நடைபெற்ற எட்பாஜ்ட்ன் ஆடுகளத்தை இறுதிவரை புரிந்துகொள்ள முடியாமல் இருந்தது.

காரணம் பாகிஸ்தான் முதற்போட்டியில் கென்யாவை எதிர்கொண்டதும் இதே எட்பாஜ்டன் மைதானத்தில்தான். இந்தப் போட்டியில் அப்ரிடியும், சொகைப் மலிக்கும் முறையே 5, 3 விக்கெட்டுக்களை வீழ்த்தி இந்த ஆடுகளம் சுழற்பந்து வீச்சாளர்களுக்கே சாதகமானது என்றொரு தோற்றப்பாட்டை உருவாக்கியிருந்தனர்.


இர்பான் பதான்
காகிதப்பூ ஆகிவிட்டதே

ஆனால், நடந்துமுடிந்த இந்தியா - பாகிஸ்தான் ஆட்டத்தைப் பார்க்கும்போது, இந்தப் போட்டியில் கைப்பற்றிய 17 விக்கெட்டுக்களில் 15 விக்கெட்டுக்கள் வேகப்பந்து வீச்சாளர்களாலேயே கைப்பற்றப்பட்டிருந்தது. இதற்குக் காரணம் இல்லாமலும் இல்லை.

இங்கிலாந்தில் பகல் போட்டிகள் பெரும்பாலும் காலை 10.45 இற்கு ஆரம்பமாகும். ஆனால் மினி உலகக்கிண்ணப் போட்டிகள், அரைமணி நேரம் முன்னதாகவே ஆரம்பிக்கப்படுவது, முதலில் துடுப்பெடுத்தாடும் அணிகளுக்குப் பெரும் தலைவலியாகவே அமைகிறது.

ஆடுகளம் ஈரமாக இருப்பதால் வேகப்பந்து வீச்சாளர்கள் அருமையாக "ஸ்விங்" செய்ய முடிகிறது. இப்படிப்பட்ட ஒரு ஆடுகளத்தில் ஓட்டங்களைக் குவிப்பது சிரமமான விடயம்தான். அதற்காக இந்திய அணியின் தோல்விக்கு ஆடுகளத்தைக் குற்றஞ்சாட்டும் கருத்தை நாம் அனுசரிக்க வரவில்லை.

இவ்வாறானதொரு நிலையில் இந்திய வீரர்களின் பொறுப்பற்ற துடுப்பாட்டத்தால் தட்டுத்தடுமாறி 200 ஓட்டங்கள் பெற்றபோது - முடிவு இந்திய அணிக்குப் பாதகமாக இருக்குமென ஆரம்பத்தில் மனம் எண்ணியது என்னவோ உண்மைதான்.

ஆனால், பாகிஸ்தான் துடுப்பாட்டத்தைத் தொடங்கியதும், முதல் மூன்று விக்கெட்டுக்களை பதான் கைப்பற்றியபோதும், அதைத் தொடர்ந்து 4 விக்கெட்டுக்கள் சடுதியாக வீழ்த்தப்பட்டபோதும், இந்திய அணிக்குச் சாதகமான நிலையை அது உண்டுபண்ணியிருந்த தென்றால் அது மிகையில்லை.

அதிலும் மொயின்கானை ஆட்டமிழக்கச் செய்த யுவராஜ்சிங்கின் அந்த அற்புதமான பிடி, ஜொன்ரி ரோட்ஸின் ஓய்வை மறக்கச்செய்த பிடி. யுவராஜ் இவ்வாறானதொரு பிடியின் மூலம் 2002 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற மினி உலகக்கிண்ணத்திலும் தென்னாபிரிக்காவின் சிமித்தை ஆட்டமிழக்கச் செய்ததையும் ரசிகர்கள் அவ்வளவு சுலபத்தில் மறக்க மாட்டார்கள்.

இது எல்லாம் அப்ரிடி களத்துக்கு வரும்வரை மட்டுமே. அந்த இறுதி நேரத்தில் எந்த வீரராக இருந்தாலும், அதிரடியாக அடித்தே ஆடியிருப்பார். அதிலும் அப்ரிடியைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. ஆனால், இதற்கும் மேலாக பதான் **Second Spell** பந்து வீசவரும் போது நுட்பமாகப் பந்துவீசி அவரை ஆட்டமிழக்க வைத்துவிடுவார் என்றே ரசிகர்கள் நம்பியிருந்தனர்.

ஏனென்றால் **First Spell** இல் 7 ஓவர்கள் பந்துவீசி, 11 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய அவர், பின்னர் ஒரே ஓவரில் இரண்டு சிக்சர்களை வாரி வழங்குவார் என எவரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

எது எப்படியோ பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளர் பொப்வூல்மர் கூறியதுபோல் - அப்ரிடி எங்களுக்குக் கிடைத்த ஒரு துருப்புச் சீட்டு என்பதைச் செயலில் காட்டிவிட்டுச் சென்றுவிட்ட அப்ரிடியையும், வெற்றியை நோக்கி இனிங்ஸை கட்டியெழுப்பிய யூசுப் யுகானாவையும் பாராட்டியே தீரவேண்டும்.


அப்ரிடி
என்றும் வாசம்

- விமலன்.

# ஆராயாமல் அள்ளி வைக்காதீர்கள்



கங்கூலி
கிரீடம் சரியாது

ஜாவிட் மியன்டாட் ஒரு விடயத்தை தெளிவாகக் கூறியிருந்தார். அது தான் 'அணித் தலைவர் அதிஷ்டம் என்பது. இந்த வகையில் இம்ரான்கான் முதன்மையானவர் எனலாம். மியன்டாட் கூறும்போது பல குளறுபடிகளைச் செய்தும் கூட இம்ரான் பல ஆட்டங்களில் வெற்றி கண்டிருக்கிறார். அதற்குக் காரணம் அதிஷ்டதேவதை தான் என்றிருக்கிறார்.

இங்கு பேசப்படப் போவது இந்திய அணித்தலைவர் பற்றியே - இவர் பற்றி எதிர்மறையான கருத்துக்கள் நிலவும் தற்போதைய சூழ்நிலையில் கங்கூலிக்கு அதிஷ்டம் கூடக் கை கொடுக்கவில்லையே என்று ஏன் கவலைப்படக்கூடாது. கங்கூலி என்ன அவ்வளவு மோசமானவரா வெறுக்கப்படுவதற்கு? ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால் அப்படி ஒன்றும் தெரியவில்லை. மறுவளமாக எந்தக் கொம்பனுக்கும் அனாவசியமாக வளைந்து கொடுக்காத முதுகெலும்பு நிமிர்ந்த மனிதன் என்று ஏன் ஏற்றுக் கொள்ள முடிவதில்லை.

கங்கூலி ஒரு காளியம்மன் பக்தர் என்பது இப்போது தெரியவருகிறது. காளியின் ஆவேசம் பக்தனிடம் இருத்தல் குறையா? இவர் பற்றிக் கூறும் போது பிராந்திய வேறுபாடுகளுக் கப்பால் இந்தியனாக நடந்துகொண்டும், ஒரு அணித்தலைவன் மற்றும் அணி வீரன் இவர் என்பதை எத்தனைபேர் அறிவார்கள். முன்பொருகாலம் கிரிக்கெட்டில் மும்பாய்க்கு (அல்லது முன்னர் பம்பாய்) முக்கியத்துவம் காட்டப்பட்டது என்பது ஒரு ரகசியம் அல்ல.

யாரும் சொல்வதற்கு எடுபடும் ஆளல்ல கங்கூலி. உதாரணமாக ஹொலன்ட் சுற்றுப் பயணத்தில் பார்த்திவ் பட்டேலை தவிர்த்து டினேஷ் கார்த்திக்கைக் கொண்டு வந்ததை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. டிராவிட் முதல் இடம் அடுத்து பார்த்திவ் என்பதே அவரது விருப்பமாக இருந்தது. இறுதியில் கங்கூலியின் எண்ணம் தான் சரி என்பதை மைதானத்தில் காண முடிந்தது. டினேஷ் கார்த்திக் நம்பிக்கையை நிறைவேற்றவில்லை. இந்த நிலைக்கு கங்கூலி குற்றவாளியா. இல்லையே.

கங்கூலி மீது இன்னொரு குற்றச்சாட்டு 2000/2001 ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரை அணித்தலைவராக இருந்து 13 இறுதிப் போட்டிக்கு இந்திய அணியைக் கொண்டு வந்து பத்தில் தோற்றவர் என்கிறார்கள். ஆனால் பதின்மூன்று இறுதிப் போட்டிக்கு வந்தவர் அவர் என்பதை மறந்து விடுகிறார்கள் இவர் மீது குற்றம் சுமத்துவோர். இன்னொரு குற்றச்சாட்டு ஏழு துடுப்பாட்ட வீரர்களைக் கொண்ட ஒருநாள் அணியை அறிமுகப்படுத்தி விளையாடிக் கொண்டிருப்பது. இவரது பக்கம் நின்று பார்க்கையில் அதீத வினைத்திறன் மிக்க பந்துவீச்சாளர்கள இல்லாத நிலையில் இன்னொரு சராசரி பந்துவீச்சு வீரரை உள்வாங்கி என்ன செய்வது? அதற்குப் பதிலாக அதீத திறமை வாய்ந்த துடுப்பாட்ட வீரர்கள் இருக்கும் நிலையில் ஒருவரைக் கூடுதலாக உள்வாங்குவது சாதகமல்லவா. தற்போது ஷேவாக், யுவராஜ்சிங் ஆகியோர் சிறப்பாகச் செய்யவில்லை என்பது தற்காலிகமானது என்பது மனம் கொள்ளத்தக்கது.

2001 ஆம் ஆண்டு அவுஸ்ரேலியா இந்தியா வந்தபோதும், கடந்த வருடம் இந்தியா அவுஸ்ரேலியா சென்றபோதும், கங்கூலி தலைமையிலான அணி என்ன செய்யப் போகிறது என்றவருக்கு அவுஸ்ரேலியாவுக்கு அமைதியாகப் போராடிக் காட்டியவர் கங்கூலி.

இன்னொன்றையும் இங்கு குறிப்பிடுதல் பொருத்தம். இது வீரர்க ளுக்கும் பொருந்தும், அணித்தலைவர் என்ற வகையில் கங்கூலிக்கும் பொருந்தும். எந்த ஒரு சர்வதேச கிரிக்கெட் வீரருக்கும் இல்லாத அழுத்தம் இந்திய வீரருக்கு இருக்கிறது.

தெரிவுக்குட்படும் வீதம் மிகமிகக் கடினமானதாகும். அடுத்து பொருளாதார ரீதியாக அதிகம் பயன் பெறுபவர்களும், பயன் படுத்தப்படுபவர்களும் இந்திய வீரர்கள் தான். அதாவது விளம்பரங்களில் பயன்படுத்தப்படும் இந்திய வீரர்கள், வாங்கிய மில்லியன் கணக்கான பணத்துக்கு திறமையைக் காட்ட வேண்டியவர்களாக இருப்பது மாபெரும் அழுத்தம்.

அதனைவிட கோடிக் கணக்கான ரசிகர்கள் கோபுரமும் கட்டுவார்கள், குழிதோண்டியும் புதைப்பார்கள் என்பதே இந்திய ரசிகர்களின் பரிமாணம். இப்படிப்பட்ட ரசிகர்களை மனதிற் கொண்டால் எந்த வீரர் நிம்மதியாக இருக்கமுடியும்? அதோடு அப்பாவிக் குடும்ப அங்கத் தவர்களுக்கு சண்டித்தனம் காட்டும் ரசிகர்களின் பயமுறுத்தல் எந்த இந்திய வீரருக்கு நிம்மதியைக் கொடுக்கும்? இந்தநிலை இந்தியா தவிர்ந்த வேறெந்தக் கிரிக்கெட் நாட்டிலாவது இருக்கிறதா? இந்திய ஊடகங்கள் கங்கூலி உட்பட இந்திய வீரர்களை எப்படியெல்லாம் அக்கு வேறு ஆணிவேறாக பிய்த்தெறிந்தார்கள் என்பது சொல்லியா தெரியவேண்டும். நல்லதைச் சொல்வதில் அதீத மிகையும், பிழைகண்டு பிடித்து அதல பாதாளத்துக்கு இறக்கி விமர்சனம் செய்வதும் என்று இவர்களின் அணுகுமுறை எந்தளவு பதட்டத்தை உருவாக்குவது.

இதையெல்லாம் மீறி ஒரு அணியை வழிநடத்துவதற்கு எவ்வளவு ஓர்மம், தைரியம் வேண்டும். இதனை கங்கூலி கொண்டிருந்தாரா இல்லையா? கங்கூலியின் ஓர்மம் ஓரளவில் ஆசியாவின் ஓர்மம் தான். கங்கூலியின் உண்மையான பாத்திரத்தை உணர்ந்து கொள்ளாமல் 'தலைக்கனம்' கொண்டவர் என்ற தப்பான ஒரு பார்வையே அவர் மீது ஒரு அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது. ஏன் அவரின் ஏனைய பக்கங்களையும் பாருங்களேன்.

\- ஜெயா.

# யாரோ யார் இவரோ



ரிக்கோலோ
விமர்சிக்கப்பட்டவர்

ICC சம்பியன் ஷிப் போட்டிகளைப் பரிசோத னைக் களங்கள் ஆக்கக்கூடாது என்பது பலரது கருத்தாக இருக்கிறது. இதுபற்றிக் கூறும் போது ஐக்கிய அமெரிக்க நாட்டின் பங்கேற்றல் பற்றி ரிக்கி பொண்டிங் குறை தெரிவித்திருக்கிறார். 'கிரிக்கெட்டின் தலைசிறந்த நாடுகள் பங்கு கொள்ளும் சுற்றுப் போட்டிகளில் பலம் குறைந்த இரண்டாம் நிலை அணிகள் பங்கு கொள்வது அபஸ்வர மாகத் தெரியும் எனக் கூறியுள்ளார் அவர்.

இதுவே அநேக கிரிக்கெட் ரசிகர்களின் கருத்தாக வும் இருக்கின்றது. சற்றுப் பின்னோக்கிப் பார்த்தால் ஐக்கிய அமெரிக்கா, வங்காளதேசம், கென்யா, ஓரளவில் சிம்பாப்வே போன்ற நாடுகள் ஏனைய நாடுகளுடன் ஈடு கொடுக்க முடியவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது.

வங்காளதேசத்தை நிமிர்த்த டேவ் வட்மோர் எவ்வளவோ பாடுபட்டாலும், ஒரு சீரான உயர் தகைமையை வெளிக்காட்ட அவர்களால் முடியாமலே இருக்கிறது என்பது வெளிப் படையான உண்மை. சிலரின் கருத்துப்படி வங் காளதேசத்தின் கிரிக்கெட் தரத்தை உயர்த்துவதற்கு இந்தியா, பாகிஸ்தான், இலங்கை போன்ற தென்னாசிய நாடுகள் ஓரளவில் கைகொடுக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. குறிப்பாகக் கூறுவதாயின் ஒரே நாடாக இருந்தவர்கள் என்ற ஒரு உறவின் அடிப்படையில் பாகிஸ்தானுக்கு வங்காளதேசம் பொறுத்துக் கூடியதொரு கடப்பாடு உள்ளதென்று கூறத்தோன்றுகிறது.

இன்னொரு புறம் கடந்த உலகக் கிண்ணப் போட்டிகளில் அரையிறுதி ஆட்டம் வரை முன்னேறிய கென்யா ICC போட்டிகளில் அதல பாதாள நிலைக்குத் தாழ்ந்துவிட்டது. இதற்கான குற்றச்சாட்டு ICC மீது கென்ய அணித்தலைவரான ரிக்கோலோவால் சுமத்தப்பட் டுள்ளது. அதாவது 18 மாதங்களாக சர்வதேச ஒரு நாள் போட்டிகள் தங்களுக்கு வழங்கப்படவில்லை. இந்தநிலையில் எவ்வாறு சர்வதேசத்தரத்தைப் பேண முடியும். எங்களுக்கு ICC நிறைய சர்வதேசப் போட்டிகளில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித்தர வேண்டும் என்று கேட்டிருக்கிறார் அவர்.

முன்பு ஒரு முறை ICC கருத்துக் கூறும் போது கென்யாவின் உள்நாட்டுக் கிரிக்கெட் கட்டமைப்பு மிகவும் பலவீனமானதாக உள்ளதால் டெஸ்ட் அந்தஸ்து கொடுக்க இயலாத நிலை காணப்படுவதாகக் கூறியிருந்தார். ஆனால் கென்யாவை மேவி வங்காளதேசத்துக்கு டெஸ்ட் அந்தஸ்து கொடுத்தது இனறைக்கும கென்யாவின் மனதில் மாறாத துயரத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதையும் மறைக்க முடியாது.

இன்னொருபுறம் சிம்பாப்வே. சிம்பாப்வேயின் அரசியல் சிம்பாப்வே கிரிக்கெட் துறையில் பெரும் பாதிப்பொன்றை ஏற்படுத்தி விட்டதென் பதை ஏற்றுக்கொள்ளவே வேண்டும். தைபுவும் அவர் தோழர்களும் வைராக்கியம் மிக்கவர்கள் தான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஏனைய டெஸ்ட் நாடுகளுடன் ஒப்பிடும் போது - வங்காள தேசத்தைத் தவிர பல்வேறு வகையிலும் மிகவும் தாழ் நிலையில்தான் இருக்கிறார்கள் என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படியாயின் என்று சிம்பாப்வே வெற்றியொன்றைக் காண்பது? அது மிகத்தொலை வாகவே தெரிகிறது.

ஐக்கிய அமெரிக்கா பொறுத்து அவர்களுக்கு இது ஒரு நல்ல சந் தர்ப்பம். ஆனால் எதிரணிகளுக் கும், கிரிக்கெட் ரசிகர்களுக்கும், சோம்பலை அதிகரிக்கும் நிலை தான் என்பது எடுத்துக்காட்டப்பட வேண்டும். இதுவே ICC போட்டிகளில் நடைபெற்றது. காலிறு திப்போட்டி நிலையிலேயே ICC கிண்ணம் பற்றிய பேச்சே சூடுபிடித்தது என்பது எல்லோ ருக்கும் தெரிந்தவிடயம்.



ரிக்கி பொண்டிங்
சொல்வது நியாயம்

ஆகவே பல விமர்சகர்கள் எடுத்துக் கூறுவது போல இரண்டாம் நிலை அணிகளின் வளர்ச்சியின் அடிப்படையில் தான், முதல் தர நாடுகள் சுற்றுப் போட்டிகளில் பங்குகொள்ள அழைக்கப்படவேண்டும். அவ்வா றன்றி முதல் தரப் போட்டிகளில் கலந்து கொண்டு பழக அல்லது அனுபவம் பெற அனுமதிப்பது உப்புச்சப்பற்ற ஒரு நிலையையே உருவாக்கும். இதற்கு நல்லதொரு உதாரணம் இந்த ICC கிண்ணப் போட்டிகளின் ஆரம்ப ஆட்டங்கள். எதிர்வரும் காலங்களில் இது பற்றி ICC மிகக் கவனமாக ஆராய்ந்து சில முடிவுகள் எடுப்பது மிக அவசியமாகும்.

\- ஜோஸப் கிருஷ்ணா.







## மாடிக் கட்டடம் அமைப்பு

(மன்னார்)

கடந்த காலத்தில் இராணுவத்தின் போர் நடவடிக்கை காரணமாக, பாரிய சேதமடைந்த மன்னார் அடம்பன் மத்திய மகா வித்தியாலயம் - இரண்டு மாடிக் கட்டட வேலைகள் நிகொட் திட்டத்தின்கீழ் புனரமைக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் பூர்த்தியான 110x25 அடி அளவுடைய இரண்டு மாடிக்கட்டடம் - எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 3 ஆம் திகதி திறந்துவைக்கப்படவுள்ளது.

# கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் திருக்குறள் மாநாடு, திருவள்ளுவர் விழா

கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழ்ச் சங்கம் நடத்தும் திருக்குறள் மாநாடும், திருவள்ளுவர் விழாவும் - நாளையும், நாளை மறுதினமும் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. முதலாம் நாள் நிகழ்வு நாளை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு நாளை காலை 8.30 மணிக்கு - 'திருக்குறள் கருத்தரங்கு' என்னும் தலைப்பின்கீழ் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

"வாழ்க்கைத் துணைநலம்" என்னும் தலைப்பில் மனோன்மணி சண்முகதாஸ௳ம், "வள்ளுவர கண்ட கடவுள்" என்னும் தலைபபில் ந.விஜய சுந்தரமும், "வள்ளுவர் தந்த கல்வி" என்னும் தலைப்பில் ப.மதுரநாயகமும், "வள்ளுவர் தந்த அறிவியல்" என்னும் தலைப்பில் பொன். கணேசமூர்த்தியும் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

முதலாம் நாளின் மாலை நிகழ்வாக, 'தமிழ்ச்சங்க 11 ஆம் ஆண்டு நிறைவுவிழா' என்னும் தலைப்பின் கீழ் - 5 மணிககு அ.கனகரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மத்திய கல்லூரி, இராமநாதபுரம் பாடசாலை மாணவிகளின் குழு நடனமும், மாணவி பிறின்சியா ஜெயச்சந்திரமூரத்தியின் தனிநடனமும், முட்கொம்பன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் நாட்டுக்கூத்தும், 'இல்லற வாழ்க்கை சுவையா? சுமையா?' என்னும் தலைப்பில் பட்டிமன்ற நிகழ்வும இடம்பெறவுள்ளது.

இரண்டாம்நாள் நிகழ்வு - காலை 8.30 மணிக்கு 'திருக்குறள் கருத்தரங்கு' என்னும் தலைப்பின் கீழ் ப.அரியரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில், "வள்ளுவர் தந்த அரசியல்" என்னும் தலைப்பில் அ.அமிர்தலிங்கமும், "வள்ளுவர் உலகமும்" எனனும் தலைப்பில் அ.சண்முகதாஸ௳ம் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

இந்த இரண்டாம்நாள் நிகழ்வின் மாலை நிகழ்வு - மாலை 5 மணிக்கு பொன்.நித்தியானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பாடசாலை மாணவிகளின் பேச்சும், அ.சண்முகதாஸ், பொன். கணேசமூர்த்தி போன்றோரின் சிறப்புச் சொற்பொழிவும், விருது வழங்கலும் இடம்பெறவுள்ளது.

## கிரவல் வீதியால் சிரமம்

மன்னார் பெருநிலப்பரப்பில் கிரவல் வீதியால் வாகனங்கள் செல்லும்போது, ஏற்படும் புழுதி - பயணிகளை பெரும் சிரமத்துக்குள்ளாக்குகின்றது.

உயிலங்குளம் சந்தியிலிருந்து ஆட்காட்டிவெளி வீதி வரை, தார் வீதி அமைக்கப்போவதாக அரச அதிபர் அறிவித்தும், இதுவரையில் அதற்கான ஆயத்தங்கள் ஏதும் இடம்பெற்றதாகத் தெரியவில்லை என அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தள்ளனர்.

## 4 முன்பள்ளிகள் அமைப்பு

மன்னார் மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் முன்னெடுக்கப்படும் டெனிஸ் அகதிகள் பேரவைத்திட்டத்தின் கீழ், நான்கு முன்பள்ளிகள் அமைக்கப்படவுள்ளன.

இந்த முன்பள்ளிகளுக்கான கட்டட வேலைகள் நடைபெற்று வருகின்றன. அடம்பன், நெடுங்கண்டல், தாமரைக்குளம், இத்திக்கண்டல் ஆகிய இடங்களிலேயே இந்த முன்பள்ளிகள் அமைக்கப்படவுள்ளன.

## கண்காட்சி நிகழ்வு

முள்ளியவளை தமிழ் வித்தியாலயத்தில் ஆரம்பப்பிரிவு மாணவருக்கான கண்காட்சி நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் பொதுச்சுடரை சந்திரதரன் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக்கொடியை ஆசிரியர் கேதீஸ்வரன் ஏற்றிவைத்தார்.

தியாகி திலீபனின் திருவுருவப் படத்துக்கு ஈகச்சுடர் ஏற்றிவைத்து, மலர்மாலை அணிவிக்கப்பட்டு, தொடர்ந்து பாடசாலை முதல்வர் வீரசிங்கம் தலைமையில் கண்காட்சி மண்டபம் திறந்து வைக்கப்பட்டது.

# மன்னார் மாவட்ட மக்களுக்கு வரட்சி நிவாரணம் கிடைக்கவில்லை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் நிலவி வரும் கடும் வரட்சி காரணமாக, மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

நாட்டில் வரட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் அனைத்துக்கும் நிவாரணம் வழங்கப்பட்டுள்ள போதும், மன்னர் மாவட்டம் வரட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டமாக முன்மொழியப்படவில்லை என பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் நிலவி வரும் வரட்சியால் விவசாயச் செய்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

தற்பொழுது நிலவிவரும் வரட்சி காரணமாக மன்னார் மாவட்டத்தில் ஒருகிலோ அரிசி 40 ரூபா முதல் 50 ரூபாவரை விற்கப்பட்டு வருகின்றது.

வரட்சியால் பாதிக்கப்பட்டோர் விபரங்கள் - வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டபோதும், இதுவரையில் எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

# தியாகி திலீபனின் நினைவாக பல இடங்களில் சிரமதானம்

(கிளிநொச்சி)

தியாக தீபம் திலீபனின் நினைவு நாளை முன்னிட்டு, கடந்த திங்கட்கிழமை வட்டக்கச்சிப் பிரதேச பெணகள் மேம்பாட்டுப் பொறுப்பாளர் தமிழ்மலரின் ஒழுங்குபடுத்தலில், மாதர் சங்கத் தலைவி தங்கேஸ்வரி தலைமையில் சிரமதானப் பணி நடைபெற்றது.

இந்தச் சிரமதானப் பணி - கரைச்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களால், கூட்டுறவுச் சங்க வளாகம் சிரமதானம் செய்யப்பட்டது.

இதேவேளை, கல்மடு கிராம சேவகரின் தலைமையில், கல்மடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை வளாகத்திலும், இராமநாதபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்திலும் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தச் சிரமதானப் பணியில் - மாதர்சங்கம், சிக்கன சேமிப்புக்குழு பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

அத்துடன் பல இடங்களிலும், பாடசாலைகளிலும் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ)

# திலீபன் நினைவு தினத்தில் செம்மலையில் கண்காட்சி

(முள்ளியவளை)

தியாக தீபம் திலீபனின் 17 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, முல்லைத்தீவு செம்மலை மகா வித்தியாலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை கண்காட்சி நிகழ்வொன்று, செம்மலை மகா வித்தியாலய மாணவ முதல்வன் செ.பிறேமநாதன் தலைமையில் நடைபெற்றது.

ஈகைச்சுடரை குமுழமுனை மகா வித்தியாலய ஆசிரியர் கு.சந்திரகலா ஏற்றி வைத்தார்.

இந்த நிகழ்வில், தமிழீழ தேசியக் கொடியை முல்லைத்தீவு செம்மலை மகா வித்தியாலய ஆசிரியர் யோகலிங்கம் ஏற்றிவைத்தார்.

தியாகி.லெப் - கேணல் திலீபனின் திருவுருவப் படத்துக்கான ஈகைச்சுடரை குமுழமுனை மகா வித்தியாலய ஆசிரியர் க.உமாப்பிரபா ஏற்றிவைத்தார்.

கண்காட்சி மண்டபத்தை செம்மலை மகா வித்தியாலய அதிபர் ஜெ.சூரியகாந்தி நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

இந்தப் பிரதேசத்தில் கிடைக்கக்கூடிய கழிவுப்பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பொருட்களே கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் எனப் பெருமளவானோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# 6 நிர்வாகசேவை உத்தியோகத்தர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் நியமனம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆறு புதிய நிர்வாகசேவை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுள் நான்குபேர் பிரதேச செயலர்களாகவும், இரண்டுபேர் நிர்வாகசேவை உத்தியோகத்தர்களாகவும் நியமனம் பெற்றுள்ளனர்.

இதில் உதவி அரச அதிபர் தலைமைப்பீட அதிகாரியாக பரமசாமி ஆரணி, ஒட்டுசுட்டான் பிரதேச உதவி அரச அதிபராக கந்தையா சுபாசினி, துணுக்காய் பிரதேச செயலராக நாகலிங்கம் நந்தகுமார், மாந்தை கிழக்குப் பிரதேச செயலராக மரியதாசன் ஜெகூ, கரைதுறைப்பற்று பிரதேச செயலராக அம்பலவாணன் சோதிநாதன், செயலக புனர்வாழ்வுக் கிளைத் திட்டப் பணிப்பாளராக செல்லத்துரை பிரணவநாதன் ஆகியோரே புதிதாக முல்லைத்தீவு மாவடடத்தில் கடந்த முதலாம் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# மேஜர் ஈழப்பிரியா ஞாபகார்த்த கராத்தே சுற்றுப்போட்டி

(புதுக்குடியிருப்பு)

இந்த ஆண்டுக்கான மேஜர் ஈழப்பிரியா ஞாபகார்த்த கராத்தே சுற்றுப் போட்டி - கடந்த வியாழக்கிழமை புதுக்குடியிருப்பு விளையாட்டுதுறைப் பொறுப்பாளர் கனிமேனன் தலைமையில் புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை கரைத்துறைப்பற்று விளையாட்டு உதநியோகத்தர் குமார் ஏற்றி வைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியை முல்லைத்தீவு மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் முகுந்தன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து சிறப்புரைகளை முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் முகுந்தன், விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் இன்பன் ஆகியோர் நிகழ்த்தினர்.

போட்டியின் நடுவராக சிகான் றொபேட்டின் முதன்மை மாணவன் சந்திரகுமார் கலந்துகொண்டார்.

## கிராமிய அபிவிருத்தி வங்கியால் தளிர் சேமிப்புக்கணக்கு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கிராமிய அபிவிருத்தி வங்கியால் தளிர் சேமிப்புக் கணக்கு நடை முறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தச் சேமிப்புக்கணக்கு 18 வயதுக்கு குறைந்த சிறுவர்களின் பெயரில் ஆரம்பிக்கப்படலாம். இந்தக் கணக்கை பெருமளவான சிறுவர்கள் ஆரம்பித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி வங்கி உத்தியோகத்தர்கள் பாடசாலைகள் தோறும் செனறு, மாணவர்களை இந்தச் சேமிப்புக் கணக்கை ஆரம்பிக்குமாறு ஊக்கப்படுத்தி வருகின்றனர்.

## சிறுவர்தின விழா

(மன்னார்)

சிறுவர் தினத்தை முன்னிட்டு மன்னார் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - எதிர்வரும் 30 ஆம் திகதி சிறுவர் தினத்தை அடம்பனில் கொண்டாடவுள்ளது.

இந்த நிகழ்வில் நாடகங்கள், விளையாட்டுப் போட்டிகள் போன்ற நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இதைத் தொடர்ந்து எதிர்வரும் முதலாம் திகதி மன்னார் நகர மண்டபத்தில் சிறுவர் தின நிகழ்வுகளை மாவட்ட மட்டத்தில் நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அக்கராயன் பிரதேசத்துக்கு போரூட் நிறுவனம் நிதியுதவி

கிளிநொச்சி மாவட்டத்தில் அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தால், போரூட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் - சமூக நலத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

மணியங்குளப் பிரதேசத்தில் உள்ள வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட - கூடிய எண்ணிக்கையுடைய குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு, அவற்றுள் 5 பயனாளிகளுக்கு ஒவ்வொரு வீடு அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இந்த வீடுகளின் மொத்தப் பெறுமதி 1 லட்சத்து 90 ஆயிரம் ரூபாவாகும். இதற்கான நிதியுதவியை போரூட் நிறுவனம் வழங்கியுள்ளது.

மேலும் இந்த நிறுவனத்தின் நிதியுதவியுடன் மூன்று கிணறுகள் புனரமைக்கப்பட்டுள்ளன.

கெங்காதரன் குடியிருப்புப் பிரதேசத்தில் கிணறு ஒன்றும், 8 ஆம் கட்டை 50 வீட்டுத்திட்டத்தில் ஒரு கிணறும், கண்ணகைபுரம் பகுதியில் ஒரு கிணறுமாக மூன்று கிணறுகள் புனரமைக்கப்பட்டுள்ளன.

இதைவிட அக்கராயன் பிரதேசத்திலுள்ள 63 வீடுகளுக்கும், கண்ணகைபுர பகுதியில் 40 வீடுகளுக்கும் மேய்வதற்கான கிடுகள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து இந்தத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# கிளிநொச்சி தொழில் நுட்பக் கல்லூரியில் ஏ.ஏ.ரி கற்கைநெறி இன்று ஆரம்பம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட தொழில் நுட்ப நிறுவனத்தில் புதிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், மேலும் புதிய கற்கை நெறிகள் விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

இவ்வாறான புதிய கற்கை நெறிகளை அறிமுகப்படுத்துவதன் மூலம, கிளிநொச்சி மாவட்டத்தில தொழில நுட்ப மனித வளத்தைப் பெருக்குவதுடன், இது ஒரு வரவேற்கத்தக்க ஒரு கற்கை நெறியாகக் கருதப் படுகின்றது.

இங்கு முதன்முறையாக ஆங்கிலமொழி மூலமான கற்கை நெறியொன்று இன்று ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

லண்டன் ரி.ஆர்.ரெக் அனுசரணையுடன் - ஏ.ஏ.ரி என்கின்ற கல்வி நெறியே இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

## இடி தாக்கியது

கிளிநொச்சி - கனகபுரத்தில் இரு பெண்கள் இடியால் தாக்கப்பட்டுள்ளனர்.

இநதச் சம்பவத்தில், கிளிநொச்சி கனகபுரத்தில் வசிக்கும் ஜெகநாதன் சந்திரிகா (வயது 30), குலசிங்கம் சங்கீதா (வயது 21) ஆகிய இரு பெண்களே பாதிக்கப்பட்டவர்களாவர்.

இந்த சம்பவம்பற்றித் தெரிய வருவதாவது - மழை காரணமாக அருகிலுள்ள கோயில் ஒன்றில் ஒதுங்கி நின்றபோதே, இந்த அனர்த்தம் நிகழ்ந்தது.

இவர்கள் இருவரும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## விளையாட்டுப் போட்டி

ஒக்ரோபர் மாதம் 6 ஆம் நாள் இடம்பெறவுள்ள உலக ஆசிரியர் தினத்தையொட்டி, முல்லைத்தீவு வலய ஆசிரியர்களுக்கிடையில் விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றன.

நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் முல்லைத்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா தலைமையில் இந்த விளையாட்டுப் போட்டி இடம்பெற்றது.

## லொறி தடம்புரண்டது

கிளிநொச்சி கண்டாவளை வீதியில் நேற்று முன்தினம் லொறி ஒன்று தடம்புரண்டது.

சைக்கிளுக்கு வழிவிட்டுச் சென்றபோதே குறித்த லொறி தடம் புரண்டது. இந்த விபத்தில் சாரதி, நடத்துனர்கள் சிறுகாயங்களுக்கு உள்ளாகினர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்*
*கருமமே கட்டளைக் கல்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## ஜனாதிபதியின் செய்தியும்; சில கருத்துக்களும்

ஐக்கிய நாடுகள் சபையில் ஜனாதிபதி சந்திரிகா ஆற்றிய உரை தொடர்பான சர்ச்சைகள் தொடர்ந்து கொண்டே இருக்கையில் - சமாதான முயற்சிகள் தடைப்பட்டுள்ள நிலையில் மீண்டும் போர் தொடங்குவதற்கான சாத்தியங்கள் எதுவுமில்லை எனவும், இனப்பிரச்சினைக்கு போர் தவிர்ந்த வழிமுறைகள் மூலம் தீர்வு காண்பதில் தமது அரசு முழுமையான உறுதியுடன் இருப்பதாக ஜனாதிபதி லண்டன் பி.பி.ஸி நிறுவனத்துக்கு அளித்த செவ்வியில் கூறியிருக்கிறார்.

ஜனாதிபதியின் இந்த வார்த்தைகள் அவரது உதடுகள் உச்சரித்தவையாக இருக்குமேயன்றி, அவரின் ஆத்மாவின் வார்த்தைகளாக இருக்காது என்பது மட்டும் நிச்சயமாகும்.

முன்னைய பொதுஜன ஐக்கியமுன்னணி ஆட்சிக்கால ஆரம்பத்தில் நடந்த பேச்சுவார்த்தைகளின் போதும், ஜனாதிபதி இதேபோன்று நம்பிக்கை தரும் வார்த்தைகளை உறுதியான முறையில் பலதடவைகள் உச்சரித்தபோதிலும், பின்னர் அவர் எவ்வாறு அவற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்டு, மூர்க்கத்தனமான போர்கோலம் கொண்டார் என்பது விபரிக்கவேண்டிய ஒன்றல்ல.

சமாதானம் என்ற சொல்லை விரும்பியோ, விரும்பாமலோ எல்லா சிங்கள ஆட்சித் தலைமைகளும் உச்சரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்ட போதிலும் அதற்கேற்ப நியாய பூர்வமான நடவடிக்கைகளை மனோதர்மத்துடன் - தேசிய அக்கறையுடன் - மேற்கொள்ள அவர்கள் ஒருபோதுமே முனைப்புக் காட்டியது கிடையாது.

அமைதித்தீர்வு தொடர்பாக பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் வேளையிலேயே, அதனைக் குழப்பும் வகையிலான வியூகங்களை வகுத்து தமிழின எதிர்ப்பு - சமாதான விரோத சக்திகள் மூலம் - அவற்றை நடைமுறைப்படுத்தி பின்புல செயற்பாடுகளையும் அவர்கள் காலம்காலமாக மேற்கொண்டு வந்தமையாலேயே வேகமாகத் தொடங்கிய ஒவ்வொரு சமாதான முன்னெடுப்பு நகர்வுகளும் இடையில் ஸ்தம்பிதம் அடையவோ, முறியவோ நேர்ந்ததெனலாம்.

இதற்கு தமிழ் மக்களது அரசியல் மற்றும் வாழ்வியல் உரிமைகளை அங்கீகரிக்கும் மனோபக்குவம் பேரினவாதிகளுக்கு ஒரு போதும் இருக்காததே காரணமாகும். தமிழ் மக்களை மூன்றாம்தரப் பிரஜைகளாகவும், சிலவேளைகளில் வந்தேறு குடிகளாகவும பிரசாரம் செய்யும் சிங்களத்தலைமைகள், அவர்களுக்கெதிராக பல தசாப்த காலமாக அரசியல்ரீதியிலும், இராணுவ ரீதியிலும் ஒடுக்குமுறைகளை தொடர்ச்சியாகப் பிரயோகித்து அழிக்க முயன்றும் தோல்வி கண்டுள்ள நிலையில், திடீரென சமாதானம் பேச மனப்பூர்வமாக முன்வருவார்களென எவரும் நம்புதல் கடினமேயாகும்.

ஆழ்மனதில் வன்மமும், மேல் மனதில் சமாதானமும் நிரந்தரத் தீர்வுக்கான வழியை ஒருபோதுமே உறுதியாக அமைத்ததாக வரலாறே கிடையாது.

ஜனாதிபதி பி.பி.ஸிக்கு அளித்த செவ்வியும், இந்த மேல் மனத்து சமாதான நிலையின் வெளிப்பாடே ஆகும்.

பத்து ஆண்டுகளின் முன்னர் அவர் மேற்கொண்ட சமாதான முயற்சிகளின் உள்நோக்கம் சலுகைகளை வழங்கி தமிழ் மக்களை 'பேய்க்காட்டலாம்' என்ற வியூகத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தமையாலேயே அது பத்து மாதங்கள் கூட தொடரமுடியாமல் போயிற்று.

அப்போதும்கூட முதன் முதலில் சமாதான சமிக்ஞையை வெளிப்படுத்தியவர்கள் புலிகள்தான் என்பதைக் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

ஒவ்வொரு முறை ஆட்சி மாற்றத்தின் போதும் முன்னர் ஆட்சியில் இருந்த அரசைவிடவும் புதியஅரசு அனுபவப் பாடங்களின் மூலமாகவேனும், சமாதான முயற்சிகளில் தீவிர விருப்பார்வம் காட்டுமென்றே தமிழ் மக்களும், விடுதலைப் புலிகளும் நம்பிக்கையுடன் எதிர்பார்ப்பது ஒரு வழமையாகி விட்டது.

ஒவ்வொரு முறையும் 'பழைய மொந்தையில் புதிய கள்' என்ற வகையிலே சமாதானத் தீர்வுகளை முன்வைத்ததனாலேயே எந்த அரசின் மீதும் நம்பிக்கையற்ற நிலை இன்று தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது எனலாம். தற்போதைய சமாதான சூழல் தமிழ் மக்களுக்கான வாழ்வியல் - அரசியல் உரிமைகள் தொடர்பாக எதனையும் சாதித்து விடவில்லை.

போர் ஓய்ந்துள்ளது... ஆனால், போர் குறித்த அச்சம் ஓயவில்லை.

துப்பாக்கிகள் தமிழ் மக்களைச் சுடவில்லை. ஆனால் அவர்களை நோக்கி குறிபார்த்தல் தொடரவே செய்கிறது.

இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து தமிழ் மக்களின் குடியிருப்புக்கள் விடுதலை பெறவில்லை. சொந்த வீட்டு வாசலுக்கு அண்மையிலேயே அத்துமீறி நுழைந்தால் 'தண்டனைக் குள்ளாவீர்கள்' என்ற எச்சரிக்கை பலகை தமிழனை அச்சுறுத்தி நிற்கிறது.

இவைஅனைத்தும் அகலாமல் - அகற்றப்படாமல் புனர்வாழ்வு, புனரமைப்புப் பற்றிப் பேசுவதில் என்ன அர்த்தம் உள்ளதாம். இவை அனைத்தும் யுத்தமற்ற ஓர் யுத்த சூழலின் வெளிப்பாடக இருக்கையில் - ஆயுதரீதியில் பிரச்சினைக்குத் தீர்வுகாண தான் விரும்பவில்லை என்கிறார் ஜனாதிபதி. இது ஒரு ஏமாற்றுத்தனமான கருத்தே ஆகும்.

இராணுவச் சூழலில் சமாதானம் என்பது எந்தக் காலத்திலும் சாத்தியமற்ற விடயமே இதனை சர்வதேசசமூகம் புரிந்து கொள்ள வேண்டும்.




ஊர்காவற் படையினரை மீட்க

## புலிகளின் கோரிக்கையை ஏற்கும் நிலையில் அரசாங்கம்!

(திருகோணமலை)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயுதங்களுடன் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய இரு ஊர்காவல் படையினரையும் விடுவிக்கக்கோரி வடக்கு-கிழக்கு சிங்கள அமைப்பு என்ற பெயரில் ஒரு சில அங்கத்தவர்கள் கடும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் உண்ணாவிரதத்தையும் அரசுக்கெதிராக நடத்தி வருகிறார்கள்.

இந்த அமைப்பின் அழுத்தங்கள் அதிகரித்து வருவதையிட்டு குழப்பமடைந்துள்ள அரசு, அவர்களது கோரிக்கையை நிறைவேற்ற, விடுதலைப் புலிகள் முன்வைத்த நிபந்தனைக்கு ஓரளவுக்கு கட்டுப்பட்டு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாக ஜனாதிபதி மாளிகையின் இராஜாங்கத் தகவல்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகள் கேட்டுக்கொண்ட 10 பேரையும் விடுவிக்கா விட்டாலும், அந்தப் பட்டியலை ஆராய்ந்து அதில் ஒரு பகுதியினரையாவது விடுதலை செய்வதன் மூலம், இரு ஊர்காவல்படையினரையும் மீட்டெடுக்கும் முயற்சிகளில் அரசு இறங்கியுள்ளது.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க, பாதுகாப்பு செயலாளர் சிறில் ஹேரத், சட்ட ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு செயலாளர் திலக் ரணவிராஜா உட்பட அரச சமாதான செயலக உறுப்பினர்கள் சிலரையும் உள்ளடக்கிய ஒரு விசேட மந்திராலோசனைக் கூட்டமொன்று ஜனாதிபதியின் உத்தரவின்பேரில் இரகசியமாக இடம்பெற்றதாகவும், அதன் இறுதியில் இம்முடிவு எட்டப்பட்டதாகவும் தெரியவருகிறது.

விடுதலைப் புலிகள் வழங்கிய பெயர்ப்பட்டியலை விபரமாகப் பரிசீலித்து, அதிலுள்ள சிலரை விடுவித்து ஊர்காவற்படையினரை மீட்க முடியுமா எனப் பேச்சுக்களை நடத்த ஒரு விசேட குழு இன்று முதல் அதற்கான முயற்சிகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும தகவல்கள் வெளியாகியுள்ளன.

## மாணவர்களின் உளநலத்தை மேம்படுத்தும் செயற்திட்டம்

டென்மார்க் அரசு மற்றும் ஐரோப்பிய யூனியன் ஆகியவற்றின நிதியுதவியோடு, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், போர்ப் பாதிப்புக்குள்ளாகிய யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலைச் சுகாதாரமும் சமூக உளவியலும் என்ற ஒரு செயற்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளது.

தரம் 6, 7, 8 ஆகிய வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்களிடையே, தெரிவு செய்யப்பட்ட 2800 மாணவர்கள் இந்தத் திட்டத்தின்கீழ் உள்வாங்கப்பட உள்ளனர்.

இருவருட காலத்துக்குள் செயற்படுத்த திட்டமிட்டுள்ள இந்தச செயற்திட்டத்தின்கீழ் முதற்கட்டமாக 800 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். பாடசாலை நேர சூசிகளுக்குப் புறம்பாக மாலை வேளைகளில் செயற்படுத்தப் படவுள்ள இந்தச் செயற்திட்டத்தின்போது மாணவர்களுக்கும், இந்தச் செயற்திட்டத்தில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கும் உணவு வழங்கப்படவுள்ளது.

போர்ப்பாதிப்புக்குட்பட்டுள்ள சிறுவர்களது உளநலத்தை மேம்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கம் என்றும், இந்தத் திட்டச் செயற்பாட்டுக்கென யாழ்ப்பாணம் சாந்திக நிறுவனத்தால் வழிகாட்டியொன்று தயாரிக்கப்பட்டு இருப்பதாகவும் அறியமுடிகிறது. இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையின் அலுவலர்கள் தென்மராட்சி கல்வி வலயத்தில் இந்தத் திட்டத்துக்காக தெரிவு செய்யப்பட்ட ஒரே ஒரு பாடசாலையான யா/நாவற்குழி மகாவித்தியாலயத்தில் அண்மையில் இந்தத் திட்டம்பற்றி, அதிபர், ஆசிரியர்களுக்கு விளக்கமளித்ததோடு, இந்தத் திட்டச் செயற்பாடுகளுக்கென ஆறு ஆசிரியர்களைத் தெரிவுசெய்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (31)

## போர் நிறுத்த உடன்பாட்டை ரத்துச் செய்து பார்க்கட்டும்

### அரசுக்கு ஐ.தே.க சவால்

விடுதலைப் புலிகளுடன் ஐக்கியதேசியக் கட்சி அரசாங்க காலத்தில் செய்துகொள்ளப்பட்ட போர்நிறுத்த உடன்பாட்டை தற்போதய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் முடிந்தால் ரத்துச் செய்து பார்க்கட்டும் என்று ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் சவால் விடுத்தனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நாடாளுமன்ற விவாதத்தின்போது ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களிடையே பலத்த வாக்குவாதம் ஏற்பட்டது.

போர்நிறுத்த உடன்படிக்கை நடைமுறையில் இருப்பதன் காரணமாக, நாட்டில் குற்றச் செயல்கள் கட்டுப்படுத்த முடியா தளவுக்கு அதிகரித்திருப்பதாக ஆளும் கட்சி உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதற்குப் பதிலளித்த ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் - போர்நிறுத்த உடன்பாடு நடைமுறையில் இருப்பதால்தான் எத்தனையோ உயிர்கள் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன.

எனவே தற்போதைய அரசாங்கம் - யுத்தநிறுத்த உடன்பாட்டை ரத்துச் செய்யட்டும் பார்க்கலாம் என்று சவால் விடுத்தனர்.

## விதை நெல் தேவைப்படுவோர் பதிவுகளை மேற் கொள்ளவும்

காலபோக நெற் செய்கைக்கு உதவுமுகமாக கமக்காரர்களுக்கு வேண்டிய நல்லின விதைநெல்லை வெளியிடத்திலிருந்து கொள்வனவு செய்து விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளை புத்தூர் கமநல கேந்திரநிலைய பெரும்பாக உத்தியோகத்தர் மேற்கொண்டு வருகிறார்.

கமக்காரர் தமக்கு வேண்டிய விதைநெல்லை புசல் இரு நூறு ரூபாவிற்கு கொள்வனவு செய்யுமுகமாக முன் கூட்டியே புலோலி கமநலசேவை நிலையத்தில் அதற்குரிய பணத்தைச் செலுத்துமாறு கோரப்பட்டுள்ளனர்.

அடுத்துவரும் இரண்டு மாதகாலத்துக்கு முன்னதாக அவர்களுக்கு வேண்டிய நெல்லை முழுமையாகத் தன்னால் பெற்றுக்கொடுக்க முடியுமென கரவெட்டி பிரதேச ஒருங்கிணைப்புக குழுக் கூட்டத்தில் பெரும்பாக உத்தியோகத்தர் உறுதியளித்துள்ளார். (13)

நெல்லியடிப் பிரதேசசபை

## சோலைவரியை அதிகரிக்க யோசனை

நீண்டகாலமாக சோலைவரி அறவிடுதலில் எந்தவித மாற்றமும் செய்யாது பத்துவருடங்களுக்குமுன் உள்ளவாறே நெல்லியடிப் பிரதேசசபைக்கு உட்பட்ட பகுதிகளில் வரி அறவீடு செய்து வருகிறார்கள்.

பிரதேசசபைக்கு தேவைகள், செலவுகள் அதிகரித்துக் கொண்டே போவதால் வரி அறவீடுகளில் மாற்றம் செய்யவேண்டியது தவிர்க்கமுடியாததாகக் காணப்படுகிறது.

எனவே விரைவில் வரிமதிப்பீட்டில் மாற்றங்களைச் செய்து வாழ்க்கை உயர்வுக்கேற்ப சோலைவரியை அறவிடுவதற்குப் பிரதேசசபை நடவடிக்கை எடுக்கவேண்டுமென அண்மையில் நடந்த பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பிரதேச செயலரினால் முன்வைக்கப்பட்ட கருத்தை சபை முழுமையாக ஏற்றுக்கொண்டது. (13)

# தியாகி திலீபனின் நினைவாக.....

## தியாக தீபம் திலீபன்

ஈழத்தமிழ் தேசிய இனம் காலந்தோறும் பேரினவாதிகளால் கட்டவிழ்த்து விடப்பட்ட இராணுவ ஒடுக்குமுறைகளுக்கு எதிராக மட்டுமன்றி, தமது வரலாற்றுரீதியான, ஆத்மார்த்த ரீதியான அபிலாஷைகளுக்காகவும் குரல் கொடுத்து வந்துள்ளது. இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் சிறுபான்மை இனத்தவர் அல்ல. அவர்கள் தனியான தேசிய இனத்தவர்கள். முன்னாள் ரஷ்யத் தலைவர் ஜோசப் ஸ்ராலின் - தனியான தேசிய இனமொன்றுக்கு வகுத்த வரைவிலக்கணத்தின்படி, தேவையான பரிமாணங்கள் முழுமையினையும் ஈழத்தமிழர்கள் கொண்டிருக்கின்றனர்.

வரலாற்றுச் சிறப்புடைய தாயகப் பிரதேசம் தனியான வரலாறு, மொழிச்சிறப்பு, தனித்துவமான பண்பாட்டு விழுமியங்கள் என்பவற்றுடன் - அவர்களுக்கே உரித்தான பொருளாதார வளங்களையும் இயல்பாகத் தமிழ்பேசும் மக்கள் கொண்டிருக்கின்றனர். இந்தத் தேசியத் தன்மையின் முழுமையை அவாவியே தமிழ்மக்களின் கோரிக்கைகள் காலம் தோறும் முன்வைக்கப்பட்டு வந்துள்ளன.

இந்த நியாயபூர்வமான கோரிக்கைகள் தென்னிலங்கையில் ஆட்சிபீடமேறிய சிங்கள அரசுகளால் உதாசீனம் செய்யப்பட்டன. மேலும் ஒருபடி போய், அதனை அவாவிய தமிழினம் இராணுவ ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டது. இந்த இராணுவ ஒடுக்குமுறை என்பது உலகமெங்கும் ஆக்கிரமிப்பாளர்கள் மேற்கொள்ளும் சகல வன்முறை வடிவங்களையும் உள்வாங்கிக் கொண்டதாகவிருந்தது.

நியாயபூர்வமான, உரிமைக்கான வேண்டுதல்கள் இராணுவரீதியாக நசுக்கப்படும் போது, அதற்கான பதிலளிப்பு ஆயுதரீதியானதாக மாறும் என்பது நியதி. இதுவே இயங்கியல் விதியுமாகும். ஈழத்தமிழர்களாகிய எமது போராட்டம் இந்த இயங்கியல் விதிக்குட்பட்டமை தவிர்க்க முடியாததே.

ஈழத்தமிழினத்தின் விடுதலைக்காக இந்த விதிக்குட்பட்டு ஆயுதப் போராட்டத்தை பல அமைப்புக்கள் ஆரம்பித்தன. அவற்றில் பல காலவோட்டத்தில் பொது இலட்சியத்தைக் கைவிட்டு சுயலாப நோக்கினைக் கைக்கொள்ளத் தொடங்கின. அதனோடு மட்டுமல்லாது பொது இலட்சியத்தை உறுதியாக முன்னெடுத்தவர்கள் மீது முட்டுக்கட்டைகளையும் ஏற்படுத்தின. இவற்றுக்கு மத்தியில் தீர்க்கமான முறையில் தமிழர் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த சக்தியாக விடுதலைப் புலிகளே விளங்கினர்.

தமது அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கான ஒரு வழியாக இருந்த ஆயுதப் போரை விடுதலைப்புலிகள் வடக்கு - கிழக்கில் படிப்படியாகத் தீவிரப்படுத்தி வந்தனர்.

தமிழர் பிரதேசங்களை ஆக்கிரமித்திருந்த இராணுவ முகாம்கள், பொலிஸ் நிலையங்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டனர். சிங்கள ஆட்சியாளர்களால் புதிது புதிதாக மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் எதிர்கொண்டு வந்தனர்.

விடுதலைப்புலிகளின் முதலாம் கட்ட ஈழப்போர் காலத்தில், ஒரு திருப்புமுனையாக 1987 ஆம் ஆண்டு ஜுலை மாதம் அமைந்தது. வடமராட்சியில் 'ஒப்பரேசன் லிபரேசன்' இராணுவ நடவடிக்கையை இராணுவம் மேற்கொண்டது. அப்போது இலங்கைப் பாதுகாப்பு அமைச்சராகவிருந்த லலித் அத்துலத்முதலி "நாங்கள் தீவிரவாதிகளைப் பேச்சுக்கு அழைத்த காலம் போய்விட்டது. இப்போது போருக்கு வாருங்கள் என அவர்களை அறைகூவி அழைக்கிறோம்" என தமிழ் மக்களை நோக்கிச் சவால்விட்டார். இந்தச் சவாலை "கரும்புலி கப்டன் மில்லர்" ஏற்றுக் கொண்டார். தேசியத் தலைவர் வே.பிரபாகரன் வகுத்த திட்டத்தை நெறிப்படுத்தித் தன்னை அழித்துப் படைமுகாம்களை அழிக்கும் முதல் நடவடிக்கையை நிகழ்த்தினார். இதன் தாக்கம் இராணுவத்துக்கு மரண அடியாக விழுந்தபோது ஆட்சிப்பீடம் கதிகலங்கிப்போனது.

அதன்பின் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தனது இராஜதந்திர முயற்சியின் ஒரு காய் நகர்த்தலாக இந்தியாவுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டார். இலங்கை - இந்திய ஒப்பந்தமானது இது தமிழ் மக்களின் பாதுகாப்பு, தேசியம், இறைமை என்பவற்றை உறுதிப்படுத்தும் என அப்போதைய ராஜீவ்காந்தி அரசினால் உத்தரவாதம் செய்யப்பட்டது.

அமைதிகாக்கும் நோக்கம் என்ற போர்வையில் இந்திய இராணுவம் ஈழமண்ணில் கால் பதித்தது. ஒட்டுமொத்த ஈழத்தமிழினத்தினதும், பாதுகாப்பைத் தாம் பொறுப்பேற்றுக் கொண்டதாகக் கூறிய இந்திய அரசு, விடுதலைப்புலிகள் வசமுள்ள ஆயுதங்களை ஒப்படைக்குமாறு கோரியது. புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்தபோதும் அரசு செய்துகொண்ட ஒப்பந்தத்தை மதிக்கவில்லை. இந்திய இராணுவமும் அதனைச் செயற்படுத்தவில்லை.

ஒப்பந்தம் மீறப்பட்டு, தமிழர்களுக்குரியன வழங்கப்படாதபோது புலிகள் தமது போரை முன்னெடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. மீண்டும் தமது கோரிக்கைகளை முன்வைத்து அகிம்சை வழியிலான போரை முன்னெடுக்கத் தலைப்பட்டனர். காந்திய வழியிலான விடுதலைப்புலிகளின் முதலாவது சாத்வீகப் போர் முன்னெடுக்கப்பட்டது.

இதனை விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் திலீபன் உண்ணாவிரதப் போராக முன்னெடுத்தார்.

1985 ஆம் ஆண்டு யாழ்.குடாநாட்டில் அமைக்கப்பட்டிருந்த இராணுவத்தினரின் பல முகாம்கள் மிகக்குறைந்த எண்ணிக்கையான போராளிகளுக்கு மத்தியில் ஆக்கிரமிப்பின் குறியீடுகளாய் இருந்தன. மிகக் குறைந்தளவிலான ஆயுதங்களையும் கொண்டு தளபதி கேணல் கிட்டு முகாம்களைச் சூழ வியூகங்களை அமைத்து, குடாநாட்டைப் பூரண கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார். விடுதலைப் புலிகளின் இராணுவரீதியான போரிடும் திறன் நிலைநாட்டப்பட்ட இந்தக் காலகட்டத்தில் - யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளராக லெப்.கேணல் திலீபன் நியமிக்கப்பட்டிருந்தார்.

உண்ணாவிரதப் போராட்டத்தை 1987 ஆம் ஆண்டு ஆரம்பிக்கும் வரையில் யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளராக இருந்த திலீபனின் தனிப்பட்ட வாழ்வுமுறை வித்தியாசமானதாகவே இருந்தது. திலீபன் தன் வாழ்வில் சராசரி இளைஞர்கள் எல்லோருக்குமே உரிய குழந்தைப் பருவ வாழ்வைப் பெறவில்லை என்றே கூறலாம்.

யாழ்ப்பாணத்தில் ஊரெழு எனும் கிராமத்தைச் சேர்ந்த திலீபன், சிறு வயதிலேயே தாயை இழந்திருந்தார். பாடசாலை ஆசிரியரான தந்தை இராசையாவிடம் இருந்து பூரண அன்பும், அரவணைப்பும் கிடைத்த போதும், தாயில்லாத பிள்ளைகள் எதிர்கொள்ள நேரிடுகின்ற இடர்பாடுகளுக்கு முகம் கொடுத்தார்.

தாயை இழந்தமையால் சிறுவயதில் தான்பட்ட துன்பங்களைப் பிற்காலத்தில் தாயகம் இழந்து, தமிழர்கள் அனுபவிக்க நேரிடும் துன்ப, துயரங்களை அவரால் ஒப்பிட்டுப் பார்க்க முடிந்தது. இது அவரது பேச்சிலும், எழுத்திலும் அதிகம் பிரதிபலித்தது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் திலீபன் தனது இடைநிலைக் கல்வியைப் பயின்ற காலகட்டத்தில் விடுதலைப்புலிகளின் மூத்த தலைவர்களின் நட்புக் கிடைத்தது. மாவீரர்களான பொன்னம்மான், ராதா போன்றவர்களின் நட்பு அவருக்குப் படிப்பறிவோடு பட்டறிவையும் பெற்றளித்தது.

வியட்நாம், கியூபா, எல்சர்வடோர், போன்ற நாடுகளின் விடுதலைப் போராட்டம் பற்றிய விடயங்களையும், பிடெல் கஸ்ட்ரோ, சேகுவரா, ஜெனரல் கியாப் போன்றவர்களின் நூல்களையும் கற்கும் வாய்ப்புக் கிடைத்தது. இந்த நூல்களைப் படித்ததன் விளைவே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கிய மறுமலர்ச்சிக் கழகமும், அங்கு வைக்கப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான விடுதலைப் போராட்டம் பற்றிய நூல்களுமாகும்.

அறிவுத் தேடல்களில் ஈடுபட்ட திலீபன் அதனைப் பாடமாகக் கொண்டு ஆக்கப் பணிகளிலும் ஈடுபட்டார். இந்த ஆக்கப்பணி என்பது மக்கள் மத்தியில் விடுதலை வேட்கையை முனைப்படுத்துவதற்கான செயற்பாட்டுத்தளமாக அமைந்தன.

க.பொ.த உ/த பரீட்சையில் உயிரியல் பிரிவில் சித்தி பெற்ற திலீபன் மருத்துவ பீடத்திற்குத் தெரிவானார். பார்த்தீபனாக, மருத்துவ பீட மாணவனான காலப்பகுதியில் அரசு தமிழ் மக்கள் மீது தென்னிலங்கையில் கட்டவிழ்த்துவிட்ட மற்றொரு இனக்கலவரம் 1983 ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. இந்தக் காலப்பகுதியே அவரை விடுதலைப்புலியாக ஆக்கியது. போர்ப்பயிற்சிகளை நிறைவு செய்து திலீபனாக வெளிவந்த அவர் - வலிகாமத்தின் ஒரு பகுதியில் அரசியற்பணிகளில் ஈடுபட்டு வந்தார். அந்தப் பணியில் அவர் காட்டிய திறமை, ஈடுபாடு, விசுவாசம் என்பனவற்றின் காரணமாக தலைமைப்பீடம் அவரை யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளராக நியமித்தது.

1985 ஆம் ஆண்டு முதல் இந்தப் பொறுப்பை வகிக்கத் தொடங்கினார். இந்தக் காலப்பகுதியில் முகாம்களுக்குள் முடக்கப்பட்டிருந்த படையினர் ஆக்கிரமிப்புக்கான முன்னேற்ற நடவடிக்கையில் ஈடுபட்டார்கள். ஆயினும் விடுதலைப் புலிகளால் அவ்வப்போது அவை முறியடிக்கப்பட்டன. இந்த முறியடிப்புச் சமர்களில் தளபதி கேணல் கிட்டுவுடன் திலீபனும் பங்கெடுத்தார். இத்தகைய ஒரு சமரில் வயிற்றில் அவர் விழுப்புண் பட நேர்ந்தது அவரது சிறு குடலின் ஒரு பகுதி சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்பட்டது. அதன் பின்பும் புதுவாழ்வு பெற்றது போல விடுதலைப் பணியில் முனைப்புடன் செயற்பட்டார்.

தமிழீழ தேசத்தின் உருவாக்கத்துக்கு உறுதுணையான உட்கட்டுமான திட்டங்களை முன்னெடுக்கத் தொடங்கினார். பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், தமிழீழ மாணவர் அமைப்பு, சுதந்திரப் பறவைகள், ரடோ போன்ற அமைப்புக்கள் ஸ்தாபிக்கப்பட்டன. இந்த அமைப்புக்கள் ஊடாக பிரதேச பொருளாதார வள்ர்ச்சிக்கு பெரும் பங்களிப்புச் செய்தார். சுதந்திரப் பறவைகள் மூலம் பெருமளவு மகளிர் விடுதலைப் போராட்டத்தினுள் உள்வாங்கப்பட்டனர். மாணவர்கள் தமிழீழ மாணவர் அமைப்பின் மூலம் விடுதலைப் போராட்டத்திற்கு தமது பங்களிப்பை வழங்கத் தலைப்பட்டனர்.

போராட்டத்தை மக்கள் மயப்படுத்துவதில் ஊடகங்கள் என்றுமே பங்களிப்புச் செய்து வருகின்றன. திலீபன் இதை விளங்கிக் கொண்டு. ஊடக உருவாக்கங்களைத் தமிழீழ மண்ணுக்கென்றே மேற்கொண்டார். அச்சு ஊடகங்கள் மட்டுமன்றி இலத்திரனியல் ஊடகங்களும் நிறுவப்பட்டன.



திலீபனின் அரசியல்பணி பல தளங்களிலும் விரிந்திருந்தது. 1987.07.05 அன்று முதல் கரும்புலித் தாக்குதலை நெல்லியடியில் கரும்புலி கப்டன் மில்லர் நிகழ்த்திய போது மில்லரின் கடைசிப் பொழுதுவரை திலீபன்கூடவிருந்தார். மில்லரின் தாக்குதல் திலீபனுக்குப் புதியதொரு திடசங்கற்பம் கொள்ளக் காரணமானது. மில்லரைப் போலவே தானும் போராட்ட வரலாற்றில் புது சகாப்தம் ஒன்றைப் படைக்க வேண்டும் என எண்ணிக் கொண்டார்.

விரைவிலேயே அப்படியொரு காலம் இந்திய இராணுவத் தலையீட்டின் வடிவில் கிடைத்தது. தமிழீழ மண்ணில் புதியதொரு போருக்கான வடிவை அவர் வடிவமிட்டார். தேசியத் தலைவருடன் வாதாடி அதற்கான அனுமதியையும் பெற்றார்.

இந்திய அமைதிப்படை மக்கள் எதிர்பார்ப்புக்களைக் காலில்போட்டு மிதித்தது. தமிழீழ மண் சிங்களப் பேரினவாதப் பிடிக்குள் இந்தியாவின் அனுசரணையுடனேயே மாண்டுகொண்டிருந்த போதுதான் திலீபன் 1987.09.15 செவ்வாய்க்கிழமை காலை 9.55 மணியளவில் கீழ்வரும் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதப் போரைத் தொடங்கினார்.

- ☆ **மீளக்குடியமர்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாகத் திட்டமிடப்படும் சிங்களக் குடியேற்றம் தடுத்து நிறுத்தப்படவேண்டும்.**
- ☆ **சிறைச்சாலையிலும் தடுப்பு முகாமிலும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகள் யாவரும் விடுவிக்கப்படவேண்டும்.**
- ☆ **அவசரகாலச் சட்டம் முற்றாக நீக்கப்படவேண்டும்.**
- ☆ **ஊர்காவற்படைக்கு வழங்கப்பட்ட ஆயுதம் யாவும் மீளப்பெறப்படவேண்டும்.**
- ☆ **தமிழ்ப் பிரதேசத்தில் புதிதாகப் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படும் முயற்சிகள் முற்றாகக் கைவிடப்படவேண்டும்.**

இந்த ஐந்து அம்சக் கோரிக்கைகளும் மறுக்கப்படமுடியாத நியாயபூர்வமானவை என்பது மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

ஏற்கனவே ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி சுதுமலைப் பிரகடனத்தில் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார் : 'போராட்ட வடிவங்கள் மாறலாம். ஆனால், போராட்ட இலட்சியம் மாறாது'. அதே இலட்சியத்தை நோக்கி திலீபன் மாறிய போராட்ட வடிவத்தைக் கையாண்டார்.

நீராகாரம் எதுவுமற்று காந்திய வழியால் காந்தி தேசத்துக்கு எதிராக ஆரம்பித்த போர் விரைவிலேயே வெகுஜனத் தன்மையைப் பெற்றுக்கொண்டது. திலீபனைப் போலவே குடும்பப் பெண்கள் உட்பட பலர் - திலீபன் முன்வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி சாகும்வரையான உண்ணாவிரதப் போரை ஆரம்பித்தார்கள். வல்வெட்டித்துறை, முல்லைத்தீவு, மாங்குளம், மட்டக்களப்பு என எங்கும் திலீபனுக்கு ஆதரவாக உண்ணாவிரதப் போர்கள் மூண்டன. இந்தத் தன்மையானது திலீபனால் முன்வைக்கப்பட்ட ஐந்து அம்சக் கோரிக்கைகளுக்கு வெகுஜனத் தளத்தை உருவாக்கியது. போராட்ட இலட்சியத்தையும் அன்றைய காலகட்ட அரசியல் சூழ்நிலையையும், புதியதோர் போராட்ட வடிவத்தின் ஊடாக இணைக்கின்ற மையப் புள்ளியாகத் திலீபன் தோற்றம் பெற்றார்.

நல்லூர் ஆலய வீதியில் அவன் நடத்திய தியாக வேள்வியும், 26.08.1987 அன்று காலை 10.48 மணிக்கு அவன் எய்திய தியாக மரணமும் இளமுள்ளங்களின் நாடி நரம்புகளில் உத்வேகத்தை ஊட்டின. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூடுதிரையைக் கிழித்தெறிந்தன.

இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி 04.08.87 இல் சென்னை மெரீனா கடற்கரையில் பேசும் போது குறிப்பிட்டதாவது :

மேற்படி உடன்படிக்கை மூலம் இலங்கைத் தீவின் மூன்றிலொரு நிலப்பரப்பு ஆள்புலமும், கடலில் முன்றில் இரண்டு ஆள்புல நீர்ப்பரப்பும் இலங்கைத் தமிழர்களுக்குச் சொந்தமாகிவிட்டது. இந்திய மாநில அரசுகள் ஒவ்வொன்றுக்கும் கொடுக்கப்பட்டுள்ளதைப் போன்ற சமதையான அதிகாரம் இலங்கையின் வடக்கு - கிழக்குத் தமிழர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

இந்த வார்த்தைகள் சர்வதேசத்தில் மாயைத் தோற்றத்தை உருவாக்கியிருந்தன. ஆனால், தர்க்க ரீதியில் இதற்கு உட்பட்டதான கோரிக்கைகள் எதனையும் இந்திய அரசு நிறைவேற்றத் தவறியதால், திலீபன் ஈட்டிய தியாக மரணம் அந்த மாயைத் தோற்றத்தை உடைத்தெறிந்தது.

திலீபனின் இந்த அகிம்சைப் போர் தமிழீழத்தின் வரலாற்றில் முதன்மையானதும், உச்சமானதுமாக அமைந்தது. பின்வந்த அகிம்சைப் போராட்டங்களுக்கும், வெகுஜன எழுச்சிகளுக்கும் வழிகாட்டியாக அமைந்தது.

இன்று அரசியல் ரீதியில் பல வெற்றிகளை எட்டக் காரணமாகவும், வெகுஜனப் போராட்டங்களுக்கும் திலீபனே காரணமாக இருந்தார் என்பதே உண்மையானது. அன்று திலீபனின் தியாக மரணத்தின் பின் போராட்டத்தைக் காப்பதற்கான போர் வெடித்தது. அதன் முடிவில் இந்திய ஆக்கிரமிப்புப் படை வெளியேறியது.

முடிவில் லெப். கேணல் திலீபன் ஆரம்பித்த தியாக வேள்வியின்பின் நூற்றுக்கணக்கில் போராளிகள் களத்தில் வீரமரணமடைந்தனர். திலீபனின் ஆத்மீக பலத்துக்கு முன்னால் இந்திய இராணுவத்தின் பலம் தோற்றுப்போனமை வரலாறாயிற்று. ☆

---

## எமக்கோர் நாடு படைத்தனன் திலீபன்

**நல்லூர் எழிலூர் நல்லருள் வழங்கும்**
**வல்லமையுறையும் இறையின் இல்லம்**
**கல்லெனு மிதயம் கரைக்கும் முருகனின்**
**கனிவுடைப் பார்வையிலமர்ந்தனன் திலீபன்**

**வெற்றுடல் வளர்க்கும் உணவினைத் தவிர்த்தான்**
**சற்றயர் வெய்தினும் உறுபசி சுமந்தான்**
**வற்றிடும் உதிரம் வருத்திய போதும்,**
**சொற்பநீர் தானும் பருகிட மறுத்தான்**

**உறுதியி லிரும்பாய் உணர்வினி லுருக்காய்**
**அறவழி யரசியல் கருத்தினை யுரைத்தான்**
**நெறிமுறை யாளும் தலைவன் தியாகப்**
**பெறுமதிப் பொருளாய் வேள்வியை வளர்த்தான்**

**இரும்பினு மிறுகிய இந்தியப் படையினர்**
**பெரும்பழி சுமந்து கொலைக்களம் படைத்தார்**
**வருத்தித் தமிழரை நொருக்கி யழித்ததால்**
**விரக்தி யடைந்தவர் முகத்திரை கிழித்தான்**

**ஆவியு மடங்கி யொடுங்கிய போதும்**
**பாவிய ரெம்முயிர் காப்பதே நோக்காய்**
**தூவினான் சுதந்திரத் தணற்பொறி யெங்ஙனும்**
**தாவியே யெரித்தவர் படையினைச் சாய்த்ததே**

**தமிழினம் காக்கத் தன்னுட லுருக்கி**
**எமனெனு மிந்திய வல்லர சதிர்ந்திட**
**இமையினை மூடி இன்னுயி ரீந்து**
**எமக்கோர் நாடு படைத்தனன் திலீபன்**

*-மாரீசன்-*

---

## அகல் விளக்கேற்றிடுவோம்!

*அகிம்சைக்குப் பெயர் போன பாரதம் பார்த்திருகக*
*ஆகாரம் இன்றியே ஆவிதனைத் துறந்த வனே*
*அடக்க நினைத்த அண்டைநாட்டுக்குள்ள நரி*
*அடங்கிப் போனதடா உன்தியாகம் கண்டதனால்*

*ஆயுத முனை கொண்டு அடக்க நினைத்தோரை*
*அகிம்சை தனைக்கொண்டு அவனியை வென்றவனே*
*ஆலயத்து ஆண்டவன் போல் எம்மனதில் வீற்றிருக்க*
*ஆயிரம் நிலவெடுத்து அகல்விளக்கு ஏற்றிடுவோம்!*

*ஏ. விஜயன் (பாஷையூர்)*

## நாளும் வாழ்கிறாய்

*நித்திய விளக்கே - என்றும்*
*நீங்கா தொலிக்கும்*
*சத்தியக் குரலே - விடியலின்*
*செஞ்சூரியனே*
*ஆர்ப்பரித்து வந்த - இந்திய*
*ஆதிக்கப் படைகளை*
*நீர்த்துப் போகவைத்த - உன்*
*உயர்ந்த தியாகம் கண்டு*
*போர்த்திக் கொண்டது இமயம் - தன்*
*காந்திய வரலாற்றை!*
*நெருங்குண்ட தேசத்தின் எழுச்சியில்*
*தேகத்தை கரைத்த பெருமகனே - உடல்*
*தளர்ந்தபோதும் கொள்கை*
*தளராத திருமகனே - விடியலுக்காய் நீ*
*தந்த தற்கொடையால் நாளும்*
*வாழ்கின்றாய் எம்மவர் மனங்களில்*

*- நெற்கொழு தாசன் (வல்வை)*

### இங்கிலாந்து அணியைத் தோற்கடித்ததன் மூலம்

# ஐ.சி.சி. சம்பியன் கிண்ணத்தை மேற்கிந்தியத்தீவுகள் வென்றது!












மேற்கிந்தியத் தீவுகள் - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் இங்கிலாந்தின் பிறிட் ஓவல் மைதானத்தில் மிகவும் பரபரப்பாக நடைபெற்ற மினி உலகக்கிண்ண இறுதிப்போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 2 விக்கெட்டுக்களால் இங்கிலாந்தை தோற்கடித்து கிண்ணத்தைக் கைப் பற்றியது.

நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத்தீவுகள் அணித் தலைவர் லாரா, முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார். இதனால் இங்கிலாந்து அணி துடுப்பெடுத்தாடியது. அந்த அணி சார்பாக திறஸ் கோதிக் மற்றும் விக்ரம் சோலங்கி இருவரும் ஆரம்ப வீரர்களாகக் களம் இறங்கினர்.

மேற்கிந்தியத் தீவுகளின் பந்துவீச்சாளர்கள் ஆரம்பம் முதலே அச்சுறுத்தும் வகையில் பந்துவீச்சு நடத்தியதால், இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்கள் ஓட்டங்களைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

இந்த நிலையில் இங்கிலாந்து அணியின் முதலாவது விக்கெட், அவ்வணி 12 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் பறிபோனது.

4 ஓட்டங்களைப் பெற்றிருந்த சோலங்கி பிராட்சோவின் பந்துவீச்சில் விக்கெட் கீப்பரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் திறஸ்கோதிக்குடன் வோகன் இணைந்தார். இவரும் 7 ஓட்டங்களுடன் அட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து வந்த ஸ்ரைஸ் 18 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ரன் அவுட்டானார்.

இங்கிலாந்து அணியின் வீரர்கள் அனைவரும் இவ்வாறு சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தபோதும் திறஸ்கோதிக் 124 பந்துகளில் 14 பவுண்டரிகள் அடங்கலாக 104 ஓட்டங்களைக் குவித்தார்.

இறுதியில் இங்கிலாந்து அணி 49.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 217 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

அந்த அணி சார்பில் திறஸ் கொதிக் 104, ஸ்ரஸ் 18, கோலிங்வூட 16, ஜைல்ஸ் 31 ஆகியோர் கூடுதலான ஓட்டங்களைப் பெற்றனர். ஏனையோர் 7 ஓட்டங்களுக்கு குறைவான ஓட்டங்களையே பெற்றனர்.

பந்துவீச்சில் ஹைஹன்ட்ஸ் 3, பிராட்சோ 2, கைல் மற்றும் பிராவோ ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 218 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணியின் துடுப்பாட்ட வீரர்கள் அனைவரும் சொற்ப ஓட்டங்களிலேயே ஆட்டமிழந்து பெவிலியன் திரும்பினர்.

மேற்கிந்தியத்தீவுகள் அணி ஒரு கட்டத்தில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 147 ஓட்டங்களுடன் தோல்வியின் விளிம்பில் தள்ளாடிக் கொண்டிருந்தது.

இவ்வேளை ஒன்பதாவது விக்கெட் இணைப்பாட்டத்திற்கு விக்கெட் கீப்பர் பிரௌனியுடன் பந்து



வீச்சாளர் பிராட்சோ இணைந்தார்.

இவர்கள் இருவரும் இறுதிவரை ஆட்டமிழக்காமல், நிதானமாக - மிகச் சிறப்பாக ஆடி 71 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்று 48.5 ஓவர்களில் அணியை வெற்றிக்கு (218 ஓட்டங்கள்) இட்டுச் சென்றனர்.

அத்துடன் இங்கிலாந்துக்கெதிராக ஒன்பதாவது விக்கெட்டுக்காக மேற்கிந்தியத் தீவுகள் பெற்ற அதிகபட்ச இணைப்பாட்டமும் இதுதான்.

மேற்கிந்தியத்தீவுகள் சார்பில் - கைல் 23, லாரா 14, சர்வான் 5, சந்திரபோல் 47, ஹைஹன்ட்ஸ் 8, பவல் 14 ஓட்டங்களையும், இறுதிவரை ஆட்டமிழக்காது அணியின் வெற்றிகு உதவிய பிரௌனி 35, பிராட்சோ 34 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் - பிளின்ரொப் 3, ஹர்மிசன், ஹொலிங்வூட் இருவரும் தலா 2, திறஸ் கோதிக் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இந்தப் போட்டியில் இங்கிலாந்து அணி 35 ஓட்டங்களை உதிரிகளாக விட்டுக் கொடுத்ததும் குறிப்பிடத்தக்கது.

நேற்றைய ஆட்டத்தின் நாயகனாக மேற்கிந்தியத் தீவுகளின் வெற்றிக்கு முக்கிய பங்காற்றிய பிராட்சோ தெரிவானார். ஆட்டத் தொடர் நாயகனாக சர்வான் தெரிவானார்.

### சாம்சங் நிறுவன கிரிக்கெட் தரவரிசை:

# இரண்டாவது இடத்துக்கு இலங்கை முன்னேற்றம்!

ஒரு நாள் போட்டியின் அடிப்படையில் சாம்சங் நிறுவனம் வெளியிட்டுள்ள தரவரிசைப் பட்டியலில் அவுஸ்ரேலியா 88 புள்ளிகளைப் பெற்று தொடர்ந்து முதல் இடத்தில் உள்ளது.

இலங்கை இரண்டாவது இடத்திலும் நியூசிலாந்து மூன்றாவது இடத்திலும் பாகிஸ்தான் நான்காவது இடத்திலும் இங்கிலாந்து ஐந்தாவது இடத்திலும் உள்ளன.

ஐ.சி.சி. சம்பியன் கிண்ணப் போடடியில் அரையிறுதிக்குக் கூடத் தகுதி பெறாமல்போனதால் இந்தியா 54 புள்ளிகளைப் பெற்று ஆறாவது இடத்துக்கு பின்தள்ளப்பட்டுள்ளது.

துடுப்பாட்டத்தில் அவுஸ்ரேலிய வீரர் ஹைடன் 95 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தில் உள்ளார்.

இங்கிலாந்து வீரர் பிளின்ரொப் 94 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், அவுஸ்ரேலிய வீரர் சைமண்ட்ஸ் 93 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும், இந்திய வீரர் டெண்டுல்கர் 81 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும் உள்ளனர்.

பந்துவீச்சில் அவுஸ்ரேலிய வீரர் ஜிலெஸ்பி 161 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தில் உள்ளார்.

இலங்கை வீரர்கள் சமிந்தவாஸ், முரளிதரன் ஆகியோர் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களிலும், அவுஸ்ரேலிய வீரர் காஸ்பரோவிச் நான்காவது இடத்திலும் இந்திய வீரர் இர்பான் பதான் 141 புள்ளிகளைப் பெற்று ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

## பாகிஸ்தானுக்கு எதிரான ஹொக்கி போட்டியில் இந்தியா தோல்வி

பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் செய்துள்ள இந்திய ஹொக்கி அணி - கராச்சியில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் 2-1 என்ற அடிப்படையில் பாகிஸ்தானிடம் தோல்வி கண்டது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தின் 3 ஆவது நிமிடத்தில் அர்ஜுன் ஹலப்பா ஒரு கோல் போட்டு இந்திய அணியை முன்னணி பெறச் செய்தார்.

ஆனால் இந்த வாய்ப்பை இந்திய வீரர்கள் தக்கவைத்துக்கொள்ளத் தவறிவிட்டனர். ஒரு கோல் பின்தங்கிய நிலையிலிருந்த பாகிஸ்தான் பின்னர் விறுவிறுப்புடன் ஆடியது.

முடிவில் பாகிஸ்தான் 2-1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

பாகிஸ்தான் அணியில் சோகைல் அப்பாஸ் மற்றும் சல்மான்பட் ஆகியோர் தலா ஒரு கோல் போட்டனர்.

இந்த இரு அணிகளும் மோதும் அடுத்த போட்டி நாளை குயட்டா நகரில் நடைபெறும். பாகிஸ்தான் அணிக்கு எதிராக இந்த ஆண்டு இந்தியா பெற்ற 7ஆவது தோல்வி இதுவாகும்.

# ஆசிய கூடைப்பந்தாட்ட சம்பியனானது ஈரான்!



பெங்களூர் ஆசிய ஜூனியர் கூடைப்பந்து போட்டியில் ஈரான் சம்பியன் பட்டத்தை தட்டிச்சென்றது.

பெங்களூரில் 18 ஆவது ஆசிய ஜூனியர் கூடைப் பந்து சம்பியன் ஷிப் போட்டி நடைபெற்றது. நேற்றுமுன்தினம் நடந்த இறுதிப் போட்டியில் கொரியா அணியை எதிர்த்து ஈரான் விளையாடியது.

ஆட்டத்தின் தொடக்கத்தில் இருந்தே ஈரான் வீரர்கள் சிறப்பாக ஆடி முன்னிலையை தக்கவைத்துக் கொண்டனர். விறுவிறுப்பாக நடந்த இந்தப் போட்டியில் ஈரான் 89-86 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கொரியாவை வீழ்த்தியது.

இந்த அணியின் லங்கி ஜாபர் அதிபட்சமாக 27 யாசின் சஹகியன் 22 புள்ளிகளும் பெற்றனர். இதன்மூலம் 1970 முதல் தொடங்கிய இந்தப் போட்டியில் ஈரான் தற்போது முதன் முறையாக சாம்பியன் பட்டத்தை வெனறது.

கர்நாடக மாநில முதல்வர் தரம் சிங் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசு வழங்கினார்.

### இந்திய – அவுஸ்ரேலிய டெஸ்ட்;

# நடுவர்கள் விபரம் அறிவிப்பு!

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 4 டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது. இந்தப் போட்டிக்கான நடுவர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இரு அணிகளும் மோதும் முதலாவது டெஸ்ட் போட்டி அடுத்த மாதம் 6 ஆம் திகதி பெங்களூரில் ஆரம்பமாகவுள்ளது. இந்தப் போட்டிக்கான நடுவர்கள் நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

மேற்கிந்தியத்தீவுகள் நடுவர் ஸ்டீவ் பக்னர் முதலாவது டெஸ்ட் போட்டிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இவருடன் இணைந்து நியூசிலாந்தின் பில்லிபோடன் பணியாற்றவுள்ளார்.

அண்மைக் காலமாக இந்தியா ஆடும் போட்டிகளின்போது பக்னர் தீர்ப்புக் கொடுக்கவில்லை என்ற கருத்து நிலவுகின்ற காரணத்தால் தேவையற்ற சர்ச்சையைத் தடுக்கும் நோக்கில் அவருக்கு ஒரு டெஸ்ட் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவின் ருடி குயர்ட்சன், இங்கிலாந்தின் டேவிட் ஷெப்பர்ட் மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த ஆலம்டீர் ஆகியோர் நடுவர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுளளனர்.

சென்னையில் நடைபெறவுள்ள போட்டிக்கு ருடி குயர்ட்சன் மற்றும் ஷெப்பர்ட் ஆகியோர் நடுவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இலங்கையைச் சேர்ந்த ரஞ்சன் மடுகல்ல பந்தய நடுவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.




### சீன ஓபன் ரெனிஸ்

# ரஷ்ய நாட்டு வீராங்கனைகள் அரையிறுதிக்கு முன்னேறினர்



சீன ஓபன் ரெனிஸ் தொடரில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா அரையிறுதிக்கு முன்னேறினார்.

பெண்கள் ஒற்றையர் காலிறுதிச் சுற்றுக்கள் நேற்றுமுன்தினம் நடைபெற்றன.

இதில் விம்பிள்டன் சம்பியனான மரியா ஷரபோவா, செரிபியாவின் ஜெலீனா ஜென்கோவிக்கைச் சந்தித்தார்.

முதல் செட்டில் ஷரபோவா 5-2 என முன்னிலையில் இருந்தபோது கணுக்கால் காயம் காரணமாக போட்டியிலிருந்து ஜெலீனா விலகக் கொள்வதாக அறிவித்தார்.

இதன்மூலம் ஷரபோவா அரையிறுதிக்குள் நுழைந்தார். மற்றொரு போட்டியில் யு.எஸ் ஓபன் சாம்பியனான ரஷ்யாவின் ஸ்வெட்லானா குனெட்சோவா 6-4, 6-2, என்ற நேர் செட்களில் ஆர்ஜென்ரீனாவின் கிசெலா டெல்கோவை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் பாணந்துறையில் இருவர் பலி!

(கொழும்பு)

பாணந்துறை பின்வந்த பொலிஸ் நிலையத்தில் குண்டுத் தாக்குதல் நடத்திய குழுமீது பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் இருவர் உயிரிழந்தனர்.

பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றைக் கொண்டு செல்வதற்காக வந்த குழுவொன்று பொலிஸாரின் நடவடிக்கைக்கு இடையூறு ஏற்படுத்திய போது பிணக்குத் தோன்றியது என பொலிஸ்மா அதிபர் இந்திர டிசில்வா தெரிவித்தார்.

இந்த வாய்தர்க்கத்தின் போது மோட்டார்சைக்கிளை கொண்டுபோக வந்த குழுவினர் பொலிஸார் மீது குண்டுத்தாக்குதல் மேற்கொண்டனர் எனினும் அந்தக் குண்டு வெடிக்கவில்லை.

ஆறு பேர்கொண்ட இந்தக் குழுவில் இருந்த ஒருவர் மற்றொரு குண்டைப் பொலிசார் மீது வீசினார் இந்தச் சம்பவத்தையடுத்து பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிபிரயோகத்தில் இருவர் கொல்லப்பட்டதுடன் ஏனையோர் தப்பிச்சென்றனர்.

உயிரிழந்தவர்கள் வாதுவை, பின்வத்த பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.(01)

## கனடா பொங்கு தமிழ் நிகழ்விலிருந்து...







## மரண அறிவித்தல்

### சிவகுரு சண்முகம்

*(இளைப்பாறிய தபால் ஊழியர் - கண்டாவளை)*

கண்டாவளையை பிறப்பிடமாகவும் அல்லிப்பளை பளையை வசிப் பிடமாகவும் கொண்ட சிவகுரு சண்முகம் நேற்று (25.09.2004) காலமா னார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.09.2004) ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு அல்லிப்பளையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அல்லிப்பளை,*
*பளை.*

தகவல்:
சண் சந்திரபாலன் (மகன்)

# எரிபொருள் உயர்வைக் கண்டித்து கொழும்பில் பஸ்கள் வேலைநிறுத்தம்

பெற்றோலிய பொருட்களின் விலைகளை அரசாங்கம் மீண்டும் அதிகரித்துள்ளதைக் கண்டித்து தனியார் பஸ் உரிமையாளர்கள் நேற்று கொழும்பில் வேலைநிறுத்தப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

இதன் காரணமாக நேற்று பெருமளவான தனியார் பஸ்கள் போக்குவரத்து நடவடிக்கைகளில் ஈடுபடவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்திற்கு தனியாகவும் ஏனைய பகுதிகளுக்கு தனியாகவும் இந்த விலை அதிகரிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளமையே இப்போராட்டத்துக்கு காரணம் ஆகும்.

கொழும்பு மாநகர எல்லைக்குள் டீசலின் விலை லீற்றர் ஒன்றிற்கு 8 ரூபாவாலும் கொழும்பிற்கு வெளியே 6 ரூபாவாலும் உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த புதிய விலை உயர்வின் பின்னர் ஓட்டோ டீசல் கொழும்பு மாநகரப் பகுதியில் 44 ரூபாவாகவும் வெளியிடங்களில் 42 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படவுள்ளது.

சுப்பர் டீசல் கொழும்பு மாநகர சபை பிரதேசத்தில் 47.30 சதமாகவும் வெளியிடங்களில் 49.30 சதமாகவும் விற்பனை செய்யப்படுமென தெரிவிக்கப்படுகின்றது.

பெற்றோலின் விலைகள் கொழும்பு நகரப் பகுதியில் உயர்த்தப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் லங்கா பெற்றோல் 90 ஒக்டன் 70 ரூபாவாகவும், லங்கா பெற்றோல் 95 ஒக்டன் 73 ரூபா வாகவும் விலை உயர்த்தப்பட்டுள்ளது.

ஏனைய பகுதிகளில் இவை முறையே 68 ரூபாவாகவும் 71 ரூபா வாகவும் விற்பனை செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# முதல் தொகுதி படையினர் ஹெயிட்டிக்கு புறப்பட்டனர்!

(கொழும்பு)

ஹெயிட்டியில் ஐ.நா.அமைதிகாப்புப் பணியில் ஈடுபடுவதற்காக முதற்தொகுதி இலங்கை இராணுவ அணி நேற்று கொழும்பிலிருந்து புறப்பட்டுச் சென்றது.

ஐ.நா. அமைதிப் படையில் பணியாற்றுவதற்கென 750 இலங்கைப் படையினரை இலங்கை அரசாங்கம் அனுப்ப முன்வந்துள்ளது. இவர்களில் முதற் தொகுதியினரை வழியனுப்பும் நிகழ்வு நேற்று கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் நடைபெற்றது.

14 அதிகாரிகளும் 114 படையினருமாக 128 படையினர் இந்த முதற்தொகுதியில் இடம்பெற்றுள்ளனர்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இடம்பெற்ற இவர்களுக்கான வழியனுப்பு விழாவில் - சமய நிகழ்வுகளும், கொடி அணிவகுப்புக்களும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சாந்த கொட்டேகொட இராணுவத்லைமையதிகாரி மேஜர் ஜெனரல் சூல செனவிரத்ன, மேஜர் ஜெனரல் நந்த மல்லவாராச்சி, உள்ளிட்ட படையதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

ஹெயிட்டிக்கு முதற்தொகுதி படையினரை ஏற்றிச் செல்வதற்கு ஐ.நா.வால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட



விமானம் நேற்று 10.00 மணிக்குப் புறப்படத் திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும் - விமானம் வரத் தாமதமானதால் பிற்பகல் 1.00 மணிக்குப் புறப்படும் என அறிவிக்கப்பட்டாலும் நேற்றிரவு 7.00 மணியளவிலேயே குறித்த விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்ததால் நள்ளிரவுக்கு சற்று முன்னரே படையினர் ஹெயிட்டிக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

## கழுத்து...

தெரியவருவதாவது -

நேற்றுமுன்தினம் இரவு 11.35 மணியளவில் நெல்லியடிப் பொலிஸார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவேளை நெல்லியடி முடக்காட்டுச் சந்திப் பகுதியில் சடலமொன்று கழுத்து வெட்டப்பட்ட நிலையில் கிடக்கக் கண்டனர்.

இவ்வாறு கொலை செய்யப்பட்டவர், சில வழக்குகள் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் கையொப்பம் வைப்பவர் என்பதால், பொலிஸார் சடலத்தை அடையாளம் கண்டு இவரது சகோதரரைச் சடலம் கிடந்த இடத்துக்கு அழைத்துவந்து குறித்த நபரது சடலம் தான் என உறுதிப்படுத்தினர்.

கொலை செய்யப்பட்ட தனது சகோதரர் நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் ஒலிபெருக்கியை வாடகைக்கு கொடுப்பதற்காகச் சென்றதாகவும் -

அதன் பின்னர் - பொலிஸார் தகவல் தெரிவித்ததை யடுத்தே சகோதரர் சடலமாகக் கிடப்பது தனக்குத் தெரியும் எனவும் சம்பவ இடத்துக்கு பொலிஸாரால் அழைத்து வரப்பட்ட சகோதரர் தெரிவித்தார்.

சடலம் கிடந்த இடத்திலிருந்து சமார் 25 மீற்றருக்குள் இருந்த புதருக்குள் நைலோன் கயிறுகள் மற்றும் இளைக் கயிறுகள் என்பன காணப்பட்டன.

சம்பவம் நடந்த இடத்தை பருத்தித்துறை மாவட்ட நீதிவான் க. அரியநாயகம், நெல்லியடிப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஜே.எ.தர்மதாஸ, மற்றும் பலாலிப் படைத் தலைமையக இராணுவத்தினர் ஆகியோர் பார்வையிட்டனர்.

பிரேதப் பரிசோதனைக்காக சடலத்தை மந்திகை ஆதார வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

பிரேத பரிசோதனையை பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி மேற்கொண்ட பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

இதேவேளை, கழுத்து வெட்டிக் கொல்லப்பட்ட இளைஞர் தமது அமைப்பின் தீவிர ஆதரவாளர் என ஈ.பி.டி.பி. அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(12,13,14)

# 13 ஈழத் தமிழ் அகதிகள் மன்னார் திரும்பினர்!

(கொழும்பு)

தமிழ் நாட்டிலிருந்து மேலும் 13 ஈழத் தமிழ் அகதிகள் நேற்றுமுன் தினம் மாலை வள்ளமொன்றின் மூலம் தாயகம் திரும்பியுள்ளனர்.

தலைமன்னார் கரையை சென்றடைந்த இந்த அகதிகளை தலைமன்னார் பொலிஸார் பொறுப்பேற்றனர்.

மன்னார் மாவட்ட நீதிமன்ற உத்தரவின் பேரில் இவர்கள் சிவில் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

தலா ரூபா 3 ஆயிரம் படகுக் கட்டணமாகச் செலுத்தி தாயகம் திரும்பியதாக இந்த அகதிகள் தெரிவித்தனர்.

## பல்லாயிரம் தமிழ்...

நெருக்கடியால் மூடப்பட்டுள்ளதாகவும், ஒன்ராறியோ நாடாளுமன்றத் திடலில் மாபெரும் அரங்கம் அமைக்கப்பட்டு இரண்டு பெரிய திரைகளும் நிகழ்ச்சிகளை நேரடியாக ஒலிபரப்பும் வகையில் மிகவும் சிறப்பாக அமைக்கப்பட்டிருந்தன.

எனினும், நாடாளுமன்றத்திடலின் முன்னரங்கமும் அதன் சுற்றுவீதி மற்றும் எதிரேயுள்ள ரொறன்ரோப் பல்கலைக்கழக வளாகம் என்பன சனத்திரளால் நிரம்பியுள்ளதால் மக்கள் நாடாளுமன்றத்திடலின் பின் பக்கமாகவுள்ள பூங்காவுக்கே அனுப்பப்பட்டு வருவதாக இறுதியாகக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

அங்கும் மக்கள் உரைகளையும், நிகழ்ச்சிகளையும் கண்டுகளிக்கக் கூடியவாறான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. சுமார் 1000க்கும் மேற்பட்ட தொண்டர்கள் இந்த நிகழ்வுகளை ஒழுங்கமைப்பதில் பொலிஸாருக்கும் நாடாளுமன்றக் காவலாளர்களும் உதவி வருகின்றனர்.

எங்குபார்த்தாலும் மக்கள் தமிழீழத் தேசியக்கொடிகளை கரங்களில் தாங்கிய வண்ணம் வலம் வருவதோடு தமிழீழத் தேசியத் தலைவரின் படத்தையும் தாங்கிச் செல்வதையும் காணக்கூடியதாக இருந்ததாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இந்தநிகழ்வில் - கலந்துகொண்டுள்ள மக்களின் தொகையைக் கணிக்கமுடியாதபடி இருப்பதாகவும், இந்த நிகழ்வில் - கலந்துகொள்ள மக்கள் தொடர்ந்து வருகை தந்திருப்பதாகவும் அங்கிருந்து இறுதியாகக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

எனினும் இதுவரை கனடாவில் நடந்த நிகழ்வுகளில் பங்குபற்றியவர்களை விட இவர்களின் சனத்தொகை அதிகம் எனத்தெரிகிறது.

## திலீபன் நினைவு...

கோட்டம் புளியங்கூடல் முத்துமாரியம்மன் முன்றலிலும், காரைநகரில் மறைக்காடு முத்துமாரியம்மன் கோவில் முன்றலிலும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காலை 8.30 மணி முதல் மாலை 2.30 மணிவரை உண்ணாவிரத நிகழ்வுகள் நடைபெறும். இதன் போது கலை நிகழ்வும், விசேட உரைகளும் இடம்பெறும். மாலை நிகழ்வாக கலை நிகழ்வுகள், வில்லுப்பாட்டு, நாடகம், இசைக்கச்சேரி என்பனவும் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பொதுமக்கள் கலந்துகொள்வதற்காக விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை, இன்று ஞாயிறு தினமாக இருந்தாலும் அனைத்து அரச, வங்கி, கூட்டுறவு, கல்வி, தனியார் நிறுவனம், தனியார் துறை சார்ந்த அனைத்து ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் தங்கள் அன்றாடப் பணிகளை இடைநிறுத்தி இந்த உண்ணாவிரத நிகழ்வுகளில் பங்குபற்றுமாறு யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

இதேவேளை - கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலும் திலீபன் நினைவு இறுதிநாள் நிகழ்வுகளை எழுச்சியுடன் அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளை அந்தந்த மாவட்டத்திலுள்ள பொது அமைப்புக்கள் செய்துள்ளதாக மாவட்ட செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 2[illegible].09.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.